458

GEOGRAPHY

Tanjore District

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
19 JUL 193
MADRA



E. M. GOPALAKRISHNA KONE

MADURA. MADRAS.

தஞ்சாவூர் ஜில்லா பூகோளம்

915.482 [1]

நன்னிலம்

போர்டு ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர்

என். ஆர். சுப்பிரமணிய அய்யர் பி.எ., எல்.டி.,

அவர்கள் எழுதியது.

Approved by the Text Book Committee, Madras.
Vide Consolidated List F. S. G. G. Part I. B. Suppt. Page 124 Dated 10-5-38.

32-37

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்

மதுரை :: சென்னை

ரிஜிஸ்தர் செய்தது] 1938 [விலை அணு 5

First Edition—1937
Reprinted — 1938

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
19 JUL 1938
MADRAS

முகவுரை

தஞ்சாவூர் ஜில்லா பூகோளம் புதிய முறையில் வித்தியா இலாகா அதிகாரிகளால் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளை யனுசரித்து இனிய, எளிய தமிழ் நடையில் எழுதப் பெற்றுள்ளது.

இளைஞர்கள் பூகோள சம்பந்தமான விபரங்களை இலகுவில் உணர்வது சிரமமான காரியம் என்பதுபற்றி அவர்களை நேரில் அழைத்துச் சென்று காட்டுவதுபோல அவர்களுக்கு உற்சாகத்தையுண்டாக்கும் முறையில் ஒவ்வொரு விஷயமும் சித்திரம், படம் முதலியவற்ருேடு விளக்கப் பெற்றுள்ளது.

மாணவர் படித்த பாடங்களைத் தாமே சிந்தித்து விஷயங்களைஉணர்வதற்கேற்ற பயிற்சிகளும் ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் சேர்க்கப்பெற்றுள்ளன.

இப்புத்தகத்தைப் படிக்கும் மாணவர் பூகோள சம்பந்தமான விஷயங்களை இலகுவில் உணர்வார்களென்றும் மேல் வகுப்புக்குச் செல்லுங்கால் அவர்களுக்கு இது தக்க துணையாயிருக்குமென்றும் கருதுகிறேன்.

இதைக் கண்ணுறும் ஆசிரியர் ஆதரிப்பார்கள் என்று நம்புகிறேன்.

என். ஆர். சுப்பிரமணிய அய்யர்.

பொருளடக்கம்

பாடம்		பக்கம்
1.	எல்லைகள், பொது விபரம்	1
2.	படங்களும், பிளான்களும், திசை கண்டுபிடித்தலும்	2
3.	இயற்கை யமைப்பும், நதிகளும்	4
4.	ஜில்லாவின் சுற்றுப் பிரயாணம், கடற் பாதை	10
5.	,, ரஸ்தாப் பாதை	13
	,, தஞ்சை நகரம்	15
6.	,, ரயில் மார்க்கம்	21
7.	சீதோஷ்ணம்	25
8.	விளை பொருள்கள்	26
9.	கைத் தொழில்கள், வியாபாரம்	30
10.	ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்படும் இடங்கள்	32
11.	ஜனத் தொகை, ஜனங்கள், மதம்	33
12.	தாலூகாக்கள், அரசாங்கப் பிரிவுகள்	34
	தாலூகாக்களும், முக்கிய ஊர்களும்	,,
	தஞ்சாவூர் தாலூகா	,,
	பாபநாசம் தாலூகா	37
	கும்பகோணம் தாலூகா	38
	மாயவரம் தாலூகா	,,
	சீர்காழித் தாலூகா	,,
	நன்னிலம் தாலூகா	39
	நாகப்பட்டணம் தாலூகா	,,
	மன்னார்குடித் தாலூகா	41
	திருத்துறைப்பூண்டித் தாலூகா	42
	பட்டுக்கோட்டைத் தாலூகா	,,
	அறந்தாங்கித் தாலூகா	43
	உலக விஷயங்கள்	
	தஞ்சாவூர் ஜில்லா சரித்திரச் சுருக்கம்	

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
19 JUL 1938
MADRAS

ஸ்ரீ

தஞ்சாவூர் ஜில்லா பூகோளம்.

முதற் பாடம்

எல்லைகள்

பிள்ளைகளே! நாம் வசிப்பது எந்தத் தேசமென்று உங்களுக்குத் தெரியுமா? அதற்கு இந்தியா தேசம் என்று பெயர். நாம் இந்தியாவின் தென் பாகத்தில் வசிக்கிறோம். தென் இந்தியாவின் படத்தைப் பாருங்கள். அதன் வடிவம் ஒரு முக்கோணம் போல இருக்கிறது. இப்படத்தின் நான்கு திக்குகளும் யாவை? படத்தைச் சுவரில் தொங்க விட்டுப் பார்த்தால் மேற்பாகம் வடக்குத் திக்கையும், வலது பாகம் கிழக்குத் திக்கையும், அடிப்பாகம் தெற்குத் திக்கையும், இடது



பாகம் மேற்குத் திக்கையும் காட்டும். படத்தை நன்றாகப் பார்த்து அதன் எல்லைகளைத் தெரிந்து கொள்ளுங்கள். வடபாகத்தில் பீகார், மத்திய மாகாணம், நிஜாம் ராஜ்ஜியம் முதலியவைகளும் மற்ற பாகங்களில் சமுத்திரமும் சூழ்ந்திருக்கின்றன.



இப்படத்தில் சென்னை ராஜதானி என்று பெயரிட்டிருக்கிற பாகத்தைக் கவனியுங்கள். அது இந்தியாவின் தெற்கிலும், தென் கிழக்கிலும் அமைந்திருக்கிறது. இதற்குச் சென்னை மாகாணம் என்றும்

சொல்லலாம். இவ்வாறு பல மாகாணங்கள் நமது தேசத்தில் இருக்கின்றன.

சென்னை மாகாணத்தின் தென் கிழக்குப் பாகத்தில் நாம் வசிக்கிறோம். அதற்குத் தஞ்சாவூர் ஜில்லா என்று பெயர். இம்மாதிரி பல ஜில்லாக்களைக் கொண்டது நம் சென்னை மாகாணம். நாம் இப்பொழுது கற்றுக்கொள்ளப் போவது நமது ஜில்லாவின் பூகோளமே.

இரண்டாம் பாடம்

படங்களும், பிளான்களும்

சிறுவர்களே, நமது ஜில்லாவின் படத்தைக் கவனியுங்கள். இதைப் பார்த்தால் நமது ஜில்லாவானது கடற்கரையோரத்தில் அமைந்திருக்கிறதென்பது தெரியும். கிழக்கிலும். தெற்கிலும் வங்காளக்குடாக்கடலால் சூழப்பட்டிருக்கிறது. வடக்கெல்லையைக் கவனித்தால் கொள்ளிடம் என்று பெயர் கொண்ட ஒரு ஆறு அமைந்திருப்பதைத் தெரிந்து கொள்ளலாம். அதுதான் நமது ஜில்லாவின் வடக்கெல்லை. அதற்கப்பால் திருச்சிராப்பள்ளி, தென்னாற்காடு ஜில்லாக்கள் இருக்கின்றன. மேற்கே புதுக்கோட்டை சமஸ்தானமும், தென் மேற்கில் இராமநாதபுரம் ஜில்லாவும் இருக்கின்றன.

பூகோளப் பாடங்கள் கற்றுக் கொள்ளுவதற்கு முதன் முதலில் முக்கியமாக நாம் தெரிந்து கொள்ள வேண்டியது நாம் படிக்கும் பாகத்தின் எல்லைகள் இன்னவை என்பதே. முன்னே கூறியவாறு படத்தைச் சுவரில் தொங்கவிட்டு அதன் நான்கு திக்குகளிலும் உள்ள எல்லைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக ஒரு பூபாகத்தின் படத்தை எப்படி வரைவதென்று தெரிந்து கொள்ளவேண்டும். படங்களில்லாமல் தெரிந்து கொள்ளுவதைக் காட்டிலும் படங்களைப் பார்த்துப் பூகோள விஷயங்கள் கற்றுக் கொள்ளுவது சுலபமாயும், மனதில் நன்றாகப்பதியக் கூடியதாயுமிருக்கும்



அதிகாலையில் சூரியன் உதிக்கும் திக்கை நோக்கி நின்றால் நான்கு திக்குகளையும் சுலபமாய் அறியலாம். சூரியன் உதயமாகும் திசைதான் கிழக்கு. நமது முதுகுப் புறம் இருக்கும் திசை மேற்கு. வலது கைப்புறம் தெற்கு, இடது கைப்புறம் வடக்கு. இந்நான்கு திசைகளுக்கும்



இடையிடையே தென்கிழக்கு, தென் மேற்கு, வடமேற்கு, வடகிழக்கு, என்

னும் வேறு நான்கு திசைகளும் இருக்கின்றன. இத்திசைகளைச் சுலபமாகத் தெரிந்துகொள்ள ஒரு கருவி கண்டு பிடித்திருக்கிறார்கள். அதற்



குத் “ திசைகாட்டும் கருவி ” என்று பெயர். திசைகாட்டும் கருவி யென்பது ஆங்கிலத்தில் (Compass) என்று சொல்லப்படும்.

நாமிருக்கும் ஊரோ, நமது ஜில்லாவோ, மிகவும் பெரிதா யிருந்த போதிலும் அதை நாம் காகிதத்தில் படமாக வரைந்து காண்பிக்கத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். ஏனென்றால், பூகோளசாஸ்திரத்தைப்படிக்க, படங்கள் இன்றியமையாதவை. ஒருவன் ஒரு வீடோ, அல்லது ஒரு சிறு குடிசையோ கட்ட வேண்டுமென்று உத்தேசித்தால், முதன் முதலில் அதற்கு நிலப்படம் (Plan) தயாரித்துக் கொள்ளுகிறான். அதாவது வீட்டின் நான் கெல்லைகளையும் அதனுடைய நீளம், அகலம், உட்புறத்திலுள்ள அறை, கூடம், தாழ்வாரம் முதலியவற்றின் விஸ்தீரணங்களையும், அமைப்பையும் ஒருவன் நிலப்படமாக வரைந்து கொள்ளுகிறான். ஒரு ரப்பர் துண்டு, புஸ்தகம், கண்ணாடி முதலிய சிறு சாமான்களின் தரைப்படத்தைச் சுலபமாக வரைந்து விடலாம். கண்ணாடியை ஒரு காகிதத்தின்மேல் வைத்து அதன் நான்கு முனைகளையும் எழுதுகோலின் நுனியால் குறித்துப் பிறகு கண்ணாடியை எடுத்து விட்டுக் குறிப்பிட்ட நான்கு முனைகளையும் சேர்த்துப் பார்த்தால் அது கண்ணாடியின் அளவாகும். ஒரு பெரிய பலகையின் தரைப்படத்தைக் காகிதத்தில் குறிப்பதென்றால் முடியாத காரியம். அதற்காகப் பலகையின் அகல நீளத்தை அளந்து பார்க்கவேண்டும். அப்பலகை இரண்டடி நீளமும், ஒரு அடி அகலமும் இருப்பதாக வைத்துக் கொள்ளுவோம். காகிதத்தின் மேல் ஒரு அங்குலத்துக்கு ஒரு அடி வைத்துக்கொண்டு, அகல நீளங்களை வரைந்தால் அது அப்பலகையின் படமாகும்.

படம் வரையப்பட்டிருக்கும் காகிதத்தில் பின் வருமாறு குறித்து வைப்பது அவசியமாகும். இவ்வாறே



அளவு—ஒரு அடி=ஒரு அங்குலம்.

நாம் வசிக்கும் அறைகளின் தரைப் படத்தை வரைந்து, அதிலுள்ள ஜன்னல்கள், வாசற்படிகள், தூண்கள் இவைகளைக் குறித்துக் காட்டுங்கள்.



பயிற்சி.

1. நாம் வசிப்பது எந்தத் தேசம்?
2. அதன் உட்பிரிவுகள் என்ன?
3. தஞ்சை ஜில்லா எந்த உட்பிரிவைச் சேர்ந்தது?
4. நமது ஜில்லா நம் தேசத்தின் எந்த இடத்தில் அமைந்திருக்கிறது?
5. நான்கு திக்குக்களை எப்படிக் கண்டுபிடிப்பாய்?
6. ஒரு படத்தின் திசைகளை எப்படிக்கண்டு பிடிப்பாய்?
7. நமது ஜில்லாவின் எல்லைகளென்ன?
8. ஒரு புத்தகத்தின் பிளான் வரைகிறதென்றால் என்னசெய்வாய்?
9. ஒரு வீட்டின் அகலம் 30 அடியும், நீளம் 60 அடியுமாயிருந்தால் அவ்வீட்டின் பிளானை எப்படி வரைவாய்?
10. நீ வசிக்கும் ஊரிலுள்ள ஒருபொதுவான கட்டடத்தின் பிளானை வரைந்து காட்டு.

மூன்றும் பாடம்

இயற்கை யமைப்பு

பிள்ளைகளே! தஞ்சாவூர் ஜில்லா படத்தை உற்று நோக்குங்கள். அதில் பல ஆறுகள் ஓடுவதைக் கவனித்தீர்களா? இவைகளிற் பல மேற்கிலிருந்து கிழக்கு முகமாகவும், சில தென் கிழக்கு முகமாகவும் ஓடுகின்றன என்பதைக் கவனியுங்கள். அதனால் நிலப்பரப்பின் அமைப்பு எப்படி இருக்கிறதென்று தெரிந்து கொள்ளலாம். மேற்குப் பாகம் மேடாகவும் கிழக்கு, தென் கிழக்கு, ஆகிய பாகங்கள் வர வரச் சரிந்து தாழ்வாகவும் அமைந்திருக்கின்றன.

இந்த ஜில்லாவில் பாயும் நதிகளுள் முக்கியமானது **காவிரி**. மற்ற நதிகளெல்லாம் அதன் கிளைகளே. காவிரி நதியானது வடமேற்கே சுமார் 500 மைல்களுக்கு அப்பாலுள்ள குடகு என்னும் மலைப் பிரதேசத்தில் உற்பத்தியாகி மைசூர் ராஜ்யத்தின் வழியாகத் தெற்கே சென்று சேலம், கோயம்புத்தூர் ஜில்லாக்களையும் கடந்து, திருச்சிராப்பள்ளி ஜில்லா வழியாக நமது ஜில்லாவில் பிரவேசிக்கிறது.

அதன் முக்கியமான கிளை —கொள்ளிடம்

இது திருச்சிராப் பள்ளிக்குச் சுமார் பன்னிரண்டு மைல்களுக்கு மேற்கே காவிரியிலிருந்து பிரிந்து சற்று வடகிழக்காக ஓடி, வங்காளக் குடாக் கடலில் விழுகிறது. இந்நதிதான் நமது ஜில்லாவிற்கு இயற்கையாக அமைந்த வடக் கெல்லையாகும். காவிரியைக் காட்டிலும் கொஞ்சம் பள்ளமாக இருப்பதால், காவிரியில் ஓடும் அதிக ஜலமானது இதில் விடப்படுகிறது. அதனால் தான் இதற்குக் கொள்ளிடம் என்னும் பெயர் வழங்குகிறது.

இதிலும் காவிரி நதியிலும் மூன்று இடங்களில் அணைகட்டியிருக்கிறார்கள். கொள்ளிடம் காவிரியைக் காட்டிலும் ஆழமாயிருப்பதால் காவிரியின் ஜலம் அதிகமாக அதில் கொண்டு போகப்படாமல் இருக்கும் பொருட்டு இவ்வணைகளை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். காவிரியிலிருந்து கொள்ளிடம் பிரியு மிடமாகிய “ எலமனூர் ” என்னு மிடத்தில் (1836-1838ல்) கட்டப்பட்டிருக்கும் அணைக்கு முதல் அணை அல்லது **மேலணை** என்று பெயர். இது சுமார் 100 வருஷங்களுக்கு முன் ஆங்கிலேயரால்கட்டப்பட்டது.

தஞ்சாவூர் ஜில்லா
தென்ஆற்காடு ஜில்லா
திருச்சிராப்பள்ளி ஜில்லா
புதுக்கோட்டை ராஜ்யம்
இராமநாதபுரம் ஜில்லா
பாக்ஸ் ஜலசந்தி
கொள்ளிடம்
காவேரி
வெண்ணாறு
தஞ்சாவூர்
கும்பகோணம்
பாபநாசம்
மன்னார்குடி
நீடாமங்கலம்
திருவாரூர்
முத்துப்பேட்டை
ராஜாமடம்
வல்லம்
சதுப்புநிலம்
நரசிங்ககாவேரி
வெள்ளாறு
திருமுல்லைவாசல்
காவிரிப்பட்டினம்
தரங்கம்பாடி
காரைக்கால்
திருமலைராயன் பட்டணம்
நாகூர்
நாகபட்டணம்
வேளாங்கண்ணி
வேதாரண்யம்
காலிமீர்முனை
மணல்வெளி
சதுப்புநிலம்
வண்டல்நிலம்
மேட்டுநிலம்

தஞ்சாவூருக்கு மேற்கே சுமார் பதினைந்து மைல் தூரத்திலுள்ள கோவிலடி என்னும் கிராமத்தில் காவிரி, கொள்ளிடம், வெண்ணாறு, இம் மூன்று நதிகளுக்கும் கட்டப்பட்டிருக்கும் மத்திய அணைக்குக் கல்லணை என்று பெயர். இவ்வணை சுமார் 2000 வருஷங்களுக்கு முன் சோழ அரசர்களுள் ஒருவரால் கட்டப்பட்டதாகக் கருதப் படுகிறது. நாளடைவில் பல தமிழ் அரசர்களாலும், சமீப காலத்தில் ஆங்கிலேய அரசாங்கத்தாராலும், அவ்வணை பழுதுபார்க்கப்பட்டுப் பலப்படுத்தப் பட்டிருக்கிறது. இவ்வணையின் தெற்குப் பாகத்திலிருந்து கல்லணைக் கால்வாய் என்று புதிதாக ஒரு ஆறு வெட்டப்பட்டுச் சென்ற 1934 ௵ முதல் அதில் ஜலம் விடப்பட்டு வருகிறது. இந்தக் கால்வாய் இந்த ஜில்லாவின் தெற்குப் பாகத்திலுள்ள மேட்டுப் பிரதேசங்களுக்கு ஜல வசதியை அளிக்கிறது.

மேலும் காவிரி யாற்றின் வழியாகச் செல்லும் வெள்ளமானது முழுவதும் உபயோகப் படுத்தப்படாமல் வீணைக் சமுத்திரத்திற்குச் செல்வதைத் தடுத்து, அந்நீரையும் உபயோகப் படும்படி செய்யச் சேலம் ஜில்லாவில் மேட்டூர் என்னுமிடத்தில் ஒரு தேக்கம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த ஏரியின் விஸ்தீர்ணம் சுமார் 60 சதுர மைல் இருக்கிறது. இத் தேக்கத்தினால் தஞ்சை ஜில்லாவுக்கு மிகுந்த வெள்ளத்தினால் வரக்கூடிய சேதம் தடுக்கப்பட்டிருக்கிறது.



மேட்டூர் தேக்கம்.

மூன்றாவது அணையானது கும்பகோணத்துக்கு வடகிழக்கே சுமார் பன்னிரண்டு மைல் தூரத்திலுள்ள அணைக்கரை என்னும் கிராமத்தில் கட்டப்பட்டிருக்கிறது. இதற்குக் கீழணை என்று பெயர்.



அணைக்கரை.

காவிரி நதியிலிருந்து வெண்ணாறு, குடமுருட்டி முதலிய ஐந்து முக்கிய கிளைகளும், ஒவ்வொன்றிலிருந்து பல உப கிளைகளும் பிரிந்து தஞ்சை ஜில்லாவின் பெரும்பாலான வடக்கு, கிழக்குப் பிரதேசங்களையும் செழிக்கச்செய்கின்றன. பண்டைக் காலத்தில் இவ்வாறுகளின் வழியாக ஜலம் ஏராளமாக ஓடி, தஞ்சை ஜில்லா முழுவதும் மூழ்கிப் போவதுண்டு. அதனால் இதற்குப் புனல் நாடு என்று பெயருண்டாயிற்று. (புனல் என்றால் ஜலம் என்று அர்த்தம்) இதனால் சிற்சில காலங்களில் ஏற்படும் சேதத்தைத் தடுக்கப் பல நூற்றாண்டுகளுக்கு முன் சோழ நாட்டில் அரசராகிப் புகழ் பெற்றிருந்த **கரிகாற் சோழர்**

என்பவர் ஆயிரக் கணக்கான கூலியாட்களின் உதவியால் காவிரி யாற்றின் இரு பக்கங்களிலும் உயரமான கரைக் கட்டுகளை அமைத்து வெள்ளத்தினுல் ஏற்படும் சேதத்தைத் தடுத்தார். கரைகளின் மேல் பல்வகை மரங்களையும் பயிர் செய்து கரைக்கட்டுகள் தளராமல் இருக்கும் படி செய்தார்.

தஞ்சை ஜில்லாவின் மட்டமானது பெரும்பாலும் சமுத்திர மட்டத்துக்குமேல் கொஞ்சம் உயரம்தானிருக்கிறது. இதன் மேற்குப் பாகமானது கிழக்கும், தென் மேற்குமான பாகங்களைக் காட்டிலும் உயரமாயிருக்கிறது. ஆகையால் இப்பிரதேசங்களைச் சமவெளி யென்றே சொல்லலாம். பட்டுக் கோட்டை, அறந்தாங்கித் தாலூகாக்கள் மற்ற பாகங்களைவிடச் சற்று உயரமானவை. தஞ்சாவூர்ப் பட்டணத்துக்குத் தென் மேற்கேயுள்ள வல்லத்தைச் சுற்றியிருக்கும் சில பிரதேசம் சுமார் 150 அடி உயரமுள்ளதாக இருக்கிறது. அதை ஒரு தாழ்ந்த பீடபூமி யென்றே சொல்லலாம்.

இந்த ஜில்லாவில் பெரும்பாலான நிலங்கள் சாகுபடிக்குத் தகுதியான நன்செய், புன்செய் நிலங்களே. திருத்துறைப் பூண்டித் தாலூகாவின் கிழக்கேயுள்ள வேதாரணியத்தின் சமீபத்திலும், சீர்காழித்தாலூகாவில் வேட்டங் குடிக்குச் சமீபத்திலும், தஞ்சாவூர்த்தாலூகாவில் வல்லத்துக்குச் சமீபத்திலும் சிறு சிறு காடுகள் இருக்கின்றன.

தஞ்சை ஜில்லாவின் விஸ்தீரணம்

தஞ்சை ஜில்லாவின் பரப்பு 3742 சதுர மைல் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. கடற்கரையானது கொள்ளிடத்தின் முகத்துவாரத்திலிருந்து சுமார் எழுபது மைல் தூரம் நேராகத் தெற்கே செல்லுகிறது. தெற்குக் கோடியான **கலிமீர் முனையி**லிருந்து கடற்கரை **அதிவீரராமன்** பட்டணம் வரையில் சுமார் முப்பது மைல் தூரம் மேற்கே சென்று, மறுபடியும் வளைந்து தென் பக்கம் திரும்புகிறது. கடற்கரையின் நீளம் மொத்தத்தில் சுமார் 145 - மைல்கள் ஆகும்.

குறிப்புகள்:—காவிரியாற்றின் முக்கிய கிளைகளாவன:—

i **வெண்ணுறு:** இது கோவிலடியில் கட்டப்பட்டுள்ள கல்லணைக் கருகாமையில் காவிரியிலிருந்து பிரிந்து தென்கிழக்காக ஓடித் தஞ்சாவூர்த் தாலூகாவில் சில பாகங்களிலும், பாபநாசம் மன்னர்குடி, நன்னிலம், நாகப்பட்டணம் தாலூகாக்களிலும் பாய்ந்து நாகப்பட்டணத்திற்குத் தெற்கே **வேளாங்கண்ணி** என்னுமிடத்தில் கடலில் சேருகிறது.

தஞ்சாவூருக்கு மேற்கே இதிலிருந்து வடவாறு என்னும் நதியும். வெட்டாறு என்னும் மற்றொரு நதியும் பிரிகின்றன. வடவாறு வெண்ணுற்றின் தென்கிளையாகப் பிரிந்து தஞ்சாவூர், மன்னர்குடித் தாலூகாக்களில் ஓடுகிறது வெட்டாறு வெண்ணுற்றின் வடகிளையாகப் பிரிந்துதஞ்சாவூர், பாபநாசம், நன்னிலம், நாகப்பட்டணம் தாலூகாக்கள் வழியாகச் சென்று நாகூருக்கருகில் சமுத்திரத்தில் கலக்கிறது.

வெண்ணுற்றிலிருந்து நீடாமங்கலத்துக் கருகில் பாமணியாறு, கோரையாறு, என்று இருகிளைகள் பிரிந்து அவை பெரும்பாலும் மன்னர்குடி,

திருத் துறைப் பூண்டித் தாலூகாக் களில் பாய்கின்றன.

ii குடமுருட்டி: இது திருக்காட்டுப் பள்ளியில், காவிரியிலிருந்து பிரிந்து பாபநாசம் வரையில் வடகிழக்காகச் சென்று, பிறகு தென்கிழக்காக ஓடி ஓழுதசேரி என்னும் கிராமத்துக்குச் சமீபத்தில் வெட்டாற்றுடன் கலந்து விடுகிறது. இதன் கரையில் அய்யம் பேட்டை, பாபநாசம், வலங்கிமான் முதலிய ஊர்கள் இருக்கின்றன. இதன் கிளைகள் முடி கொண்டான், திருமலைராஜன், வளப்பாறு முதலியன.

iii அரசலாறு: இது பாபநாசம் தாலூகாவில் சருக்கை என்னும் கிராமத்திற்கு மேற்கே காவிரியிலிருந்து பிரிந்து பாபநாசம், கும்பகோணம், நன்னிலம் தாலூகாக்கள் வழியாகக் கிழக்கு முகமாக ஓடிப் பிரஞ்சு நகரமாகிய காரைக்காலில் சமுத்திரத்தில் விழுகிறது. இது கும்பகோணம் பட்டணத்தின் தெற்கெல்லையாக இருக்கிறது. இதன் கிளைகளில் முக்கியமானது நாட்டான் வாய்க்கால்.

iv வீரசோழன்: இது கும்பகோணத்துக்குக் கிழக்கே மணஞ்சேரி என்னும் கிராமத்தில் காவிரியிலிருந்து பிரிந்து கும்பகோணம், மாயவரம் தாலூகாக்கள் வழியாகப் பாய்ந்து தரங்கம்பாடிக்குச் சமீபத்தில் சமுத்திரத்தில் சேருகிறது.

v கல்லணைக் கால்வாய்: இது புதிதாகப் பெருங்கல்லணையில் காவிரியாற்றிலிருந்து வெட்டப்பட்டிருப்பதால் இதற்குக் கல்லணைக்கால்வாய் என்று பெயர் வைக்கப் பட்டிருக்கிறது. இது, முன்னமே கூறியுள்ளபடி, பட்டுக்கோட்டைத் தாலூகாவின் முக்கியமான பாகங்களில் ஓடுகிறது. இதன் நீளம் சுமார் எழுபதுமைல். காவிரியாற்றின் கிளை நதிகளிலிருந்து பல சிற்றாறுகள் தஞ்சை ஜில்லாவின் பல பாகங்களில் ஓடுகின்றன. இவற்றைப் படத்தில் பார்க்கலாம்.

பயிற்சி.

1. இந்த ஜில்லாவிலுள்ள முக்கியநதியின் பெயர் என்ன ?
2. அந்த நதி எங்கே உற்பத்தி யாகிறது ?
3. எந்தெந்த ஜில்லாக்கள் வழியாக ஓடுகிறது ?
4. அதன் நீளமென்ன ?
5. அந்நதியின் முக்கிய கிளைகளெவை?
6. இந்நதியினால் தஞ்சை ஜில்லாவுக்கு ஏற்பட்டிருக்கும் முக்கியமான பயன்என்ன?
7. எவ்வெவ்விடங்களில் காவிரி நதிக்கு அணைக்கட்டுகள் ஏற்பட்டிருக்கின்றன?
8. புன்செய், நன்செய் என்றால் என்ன ?
9. நமது ஜில்லாவில் புன்செய் நிலங்கள் எந்தப்பாகத்தில் அதிகமாய் இருக்கின்றன ?
10. ஜில்லாவின் எப்பாகங்கள் உயர்ந்த பாகங்கள்? எவை தாழ்ந்த பாகங்கள்?
11. தஞ்சை ஜில்லாவில் காடுகள் இருக்கின்றனவா ? எங்கே இருக்கின்றன ?
12. இந்த ஜில்லாவின் மிகவுயர்ந்த பிரதேசமெது ?
13. அதன் உயரமென்ன?
14. அவ்விடத்திலிருந்து என்ன வெட்டி எடுக்கப்பட்டிருக்கிறது ?
15. காவிரி நதியிலிருந்து புதிதாக வெட்டப்பட்ட கால்வாய் எது ?
16. அதனால் எந்தப் பாகத்திற்கு ஜலவசதி ஏற்பட்டிருக்கிறது?
17. தஞ்சை ஜில்லாவின் கடற்கரை யோரத்தை ஒரு படத்தில் வரைக.
18. அது எவ்விடத்தில் நேராக இருக்கிறது?
19. எந்த இடத்தில் வளைந்திருக்கிறது ?
20. தஞ்சை ஜில்லாவின் மொத்த விஸ்தீர்ணமென்ன ?

நான்காம் பாடம்.

ஜில்லாவின் சுற்றுப்பிரயாணம்— கடற் பாதை

சிறுவர்களே! இந்த ஜில்லாவின் முக்கியமான தோற்றங்களை ஒருவன் அறிய விரும்பினால் அதைச் சுற்றிப் பார்ப்பது அவசியமாகிறது. அப்படிப் பிரயாணம் செய்வதற்குப் பல வித வசதிகள் இருக்கின்றன. அவைகள் (1) ரயில் பாதை (2) ரோடு அல்லது தரை மார்க்கமான பாதை (3) கடற்பாதை என்பனவாம்.

ஒருவன் கொள்ளிடத்தின் முகத்துவாரத்தில் ஒரு படகில் ஏறிக்கொண்டு தெற்கு நோக்கி வந்தால் சமுத்திரக்கரை ஒரே மணல் வெளியாயிருப்பதைக் காண்கிறான். காற்று அதிகமாய் இல்லாத காலங்களில் அலைகளின் வேகம் குறைவாகவே இருக்கிறது. அங்கிருந்து சுமார் பத்து மைல் தெற்கே வந்தால், **திருமுல்லைவாசல்** என்னுமிடத்திற்கு வருகிறான். பண்டைக்காலத்தில் இது ஒரு துறைமுகமாக இருந்தது. இப்பொழுது இதன் வழியாகச் சிறு



கட்டுமரத்தில் ஏறி மீன்பிடித்தல்

படகுகள் அரிசி முதலிய சாமான்களை ஏற்றிக்கொண்டு தெற்கே இலங்கைத் தீவுக்குச் செல்லுகின்றன. அவ்விடத்தில் செம்படவர்கள் சிறுசிறு கட்டு மரங்களில் ஏறிக்கொண்டு சமுத்திரத்தில் மீன் பிடிக்கிறார்கள். இம் மீன்கள் ஏராளமாக நாட்டு வண்டிகள் மூலம் உள் நாட்டுக்கு அனுப்பப்படுகின்றன.

இதற்கப்பால் தெற்கே பத்துமைல் தூரத்தில் **காவேரிப் பட்டணம்** என்ற ஒரு சிறு கிராமம் இருக்கிறது. அவ்விடத்தில் தான் காவிரி நதியானது சமுத்திரத்தில் சங்கமமாகிறது. தன்னுடைய பல கிளைகள் மூலமாகத் தஞ்சை ஜில்லா முழுவதும் ஜலத்தைச் செலுத்தி விட்டபடியால் இவ்விடத்தில் காவிரியாறு ஒரு சிறு வாய்க்காலாகத் தோன்றுகிறது. இவ்விடத்தில் சுமார் 2000 வருஷங்களுக்கு முன், சோழநாட்டில் புகழ் பெற்ற பேரரசரான **கரிகாற்சோழர்** என்பவர் தம்முடைய தலை நகரை ஸ்தாபித்திருந்ததாகத் தெரிகிறது. இதற்கு ஆதியில் "புகார் ,, என்றும், பிறகு "காவிரிப்பூம்பட்டணம்" என்றும் பெயர் வழங்கலாயிற்று. தூர தேசங்களினின்று கப்பல் மூலமாக இங்கு வந்து, பல வியாபாரிகள் வியாபாரம் செய்து கொண்டிருந்தார்கள். அதனால் சோழநாட்டில் செல்வம் விருத்தியாயிற்று.

தற்காலத்தில் இது ஒரு மிகச் சிறிய கிராமமாகவே இருக்கிறது. செம்படவர்களின் குடிசைகளே இங்கு அதிகமாயிருக்கின்றன. கடலில் ஆடி அமாவாசை ஸ்நானத்திற்காகவும், ஐப்பசிமாதத்தில் துலா ஸ்நானத்திற்காகவும் மதப்பற்றுள்ள அநேக பிரயாணிகள் இவ்விடத்திற்கு வருகிறார்கள். இவ்விடத்தில் தமிழ்க் கவிகளிற் சிறந்த **திருவெண்காடர்** என்று பெயர் கொண்ட பட்டினத்துப் பிள்ளையார் பல நூற்றாண்டுகளுக்கு முன் பிறந்தார். தமிழில் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று

கிய சிலப்பதிகாரத்தின் கதாநாயகனை கோவலனும் இங்கே பிறந்து வளர்ந்ததாகத் தெரிய வருகிறது.

அதற்கு அப்பால் சுமார் பத்து மைல் தெற்கே வந்தால் **தரங்கம்பாடி** என்னும் துறைமுகம் ஒன்று இருக்கிறது. இவ்வூர் கொஞ்ச காலத்திற்கு முன் தஞ்சை ஜில்லாவிற்கே முக்கிய பட்டணமாக விளங்கிற்று. பதினெட்டாவது நூற்றுண்டில் ஐரோப்பிய ஜாதியாரில் ஒருவராகிய டேனிஸ்காரர்கள் இவ்விடத்தில் ஆதிக்கம் பெற்றிருந்தார்கள். இதில் பல கட்டிடங்களும், இடிந்துபோன ஒரு கோட்டையும் இருக்கின்றன.

1620ம் ஹூத்தில் டேனிஸ்காரர்களால் இவ்விடத்தில் ஒரு கோட்டை கட்டப்பட்டு 1845ம்ஹூ வரையில் அவர்கள் ஆளுகையிலேயே இருந்து வந்தது. இவ்வூரில் தான் 1706ம் ஹூத்தில், முதன் முதல் பிராடஸ்டெண்டு கிறிஸ்தவப் பாதிரிமார்கள் தென்னிந்தியாவில் அவர்களது ஸ்தாபனத்தை ஏற்படுத்தினர்கள். இங்குதான் காவிரியின் கிளை நதியான வீரசோழனும் சமுத்திரத்தில் சங்கம மாகிறது.

அங்கிருந்து சுமார் பத்து மைலுக்கு அப்பால் சென்ருல், பிரஞ்சுக்காரருக்குச் சொந்தமான **காரைக்கால்** என்னும் துறைமுகம் இருக்கிறது. இது பிரஞ்சுக்காரரால் மிகவும் அழகான பட்டணமாகக் கட்டப்பட்டிருக்கிறது. இதன் ஜனத்தொகை 16,970. சென்ற காலத்திலும் அயல் நாட்டு வியாபாரங்கள் இத்துறைமுகத்தில் நடை பெற்று இருப்பதாகத் தெரிய வருகிறது. இது, சிவ பக்தர்களான நாயன் மார்கள் அறுபத்து மூவரில் **காரைக்கா**லம்மையார் என்பவர், இவ்விடத்தில் பிறந்து இங்குக் கோயில் கொண்டிருக்கும் சிவ பெருமானை வழிபட்டுப் பேறு பெற்ற முக்கிய ஸ்தலமாகும். இப்பொழுதும் அதன் அறிகுறியாக ஒவ்வொரு ஆனி மாதத்திலும் மாம்பழத் திருநாள் என்னும் திருவிழா நடை பெற்று வருகிறது. இவ்வூரில் காவிரியின் ஒரு கிளை நதியான அரசலாறும், அதன் கிளை நதியான நாட்டாறும், சமுத்திரத்தில் விழுவதைக் காணலாம்.

அதற்குத் தெற்கே சுமார் மூன்று மைல் தூரத்தில் **திருமலை ராஜன்** பட்டணம் இருக்கிறது. அது பண்டைக் காலத்து அரசாங்கத்தின் ஒரு முக்கிய பட்டணமாக இருந்ததாகத் தெரிகிறது. இவ்விடத்தில் தான் காவிரி யாற்றின் கிளை நதியான குடமுருட்டியிலிருந்து பிரியும் திருமலை ராஜனனது சமுத்திரத்தில் சேருவதைப் பார்க்கலாம்.



நாகூர் பள்ளி வாசல்

இன்னும் கொஞ்ச தூரம் தெற்கே சென்ருல் “ **நாகூர்** ” என்னும் இடத்திற்கு வரலாம். இது மகமதியர்களின் ஒரு முக்கிய வாச ஸ்தானம்.

இதில் மிகவும் பிரசித்தி பெற்ற பள்ளிவாசல் ஒன்றிருக்கிறது. வருஷந்தோறும் நடக்கும் **கந்தூரி** என்னும் உற்சவத்திற்கு ஆயிரக்கணக்கான ஜனங்கள் வருவதுண்டு.

இவ்விடத்திலிருந்து மூன்று மைல் தெற்கே வந்தால் **நாகப்பட்டணம்** வந்து சேருகிறோம். இது தஞ்சாவூர் ஜில்லாவில் முக்கியமான துறைமுகப் பட்டணம். படகிலிருந்து கீழே இறங்கிப் பட்டணத்தைச் சுற்றிப் பார்ப்பது அவசியமாகும். இதில் பல கடைத் தெருக்களும், பண்டகசாலைகளும் இருக்கின்றன. தேக்கு மரங்களும், மண்ணெண்ணெயும் இங்கே முக்கியமாக இறக்குமதியாகின்றன. நெல், அரிசி, தோல், மணிலாக் கொட்டை முதலியவைகள் முக்கியமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கடற்கரையில் உயர்ந்த தீபஸ்தம்ப



தீபஸ்தம்பம்

மும் கட்டப்பட்டிருக்கிறது. இதில் கீழத் தஞ்சைஜில்லா போர்டு ஆபீஸும், கீழத் தஞ்சை ஜில்லா கோர்ட்டும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

இவ்விடத்திலிருந்தே தென்னிந்திய இருப்புப்பாதை முதன் முதலில் ஈரோடு வரையில் ஸ்தாபிக்கப்பட்டதாகச் சொல்லுகிறார்கள். காலியான பழைய தொழிற்சாலையில் இப்பொழுது எஃகு யந்திரத் தொழிற்சாலையும் அமைக்கப்பட்டிருக்கிறது.

இங்கிருந்து வேதாரணியங் கால்வாய் வழியாய்த் தெற்கே சென்றால், கொஞ்ச தூரத்தில் **வேளாங்கண்ணி**



வேளாங்கண்ணி மாதா கோவில்

என்னு மிடத்திற்கு வரலாம். இதில் கிறிஸ்தவர்களின் புகழ்பெற்ற கோவில் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வருஷமும் இங்கு நடைபெறும் உற்சவத்திற்கு ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடுகிறார்கள்.

இதற்குத் தெற்கே சுமார் பதினைந்து மைலுக்கு அப்பால் **தோப்புத்துறை** என்னும் சிறிய துறைமுகம் ஒன்று இருக்கிறது. அதற்கு அப்பால் இருப்பது **வேதாரணியம்**.

இதிலிருந்து தெற்கே கோடிக்கரை வரையில் பலவிடங்களில் சமுத்திர ஜலத்தை வயல்களில் பாய்ச்சி உப்புக் காய்ச்சி எடுப்பதைக் காணலாம். கோடிக்கரையில் விசேஷமொன்று இருப்பதைக் கவனிக்கவும். இங்கிருந்து கடற்கரை ஓரமானது மேற்கே திரும்புகிறது. இந்த வளைவு சுமார் முப்பதுமைல் தூரம் சென்று மறுபடியும் ஒரு சிறு குடாவாக வளைந்து தெற்கே திரும்புவதைக் காணலாம்.

கோடிக்கரையில் சமுத்திர ஜலமானது மற்ற இடங்களில் இருப்பது போல் நீல நிறமாயில்லாமல், உவர் மண் கலந்த ஜலம்போல் கலங்கிச் சற்று வெண்மையாய் இருப்பதைக் காணலாம். இவ்விடத்தில் விசேஷ தினங்களில் ஏராளமான ஜனங்கள் சமுத்திர ஸ்நானம் செய்வது வழக்கம். கோடிக்கரை முற்காலத்தில் சிறந்தவொரு துறைமுகப் பட்டினமாயிருந்தது. தற்காலத்திலும் இங்கிருந்து பெரிய படகுகள் வியாபார நிமித்தம் இலங்கைத் தீவுக்குப்போய் வருகின்றன. வேதாரணியத்திற்குச் சமீபமாயுள்ள நிலங்களில் ஏராளமாய்ப் புகையிலை சாகுபடி செய்யப்படுகிறது.

இதன் மேற்குக் கோடியில் அதிராமபட்டணம் (அதிவீரராமன் பட்டணம்) என்னும் ஓரூரிருக்கிறது. அதிலும் ஏராளமாய் உப்பளங்கள் இருப்பதைப் பார்க்கலாம். கோடிக்கரையிலிருந்து அதிவீரராமன் பட்டணம் வரையில் சுமார் முப்பது மைல் தூரத்திற்கு, உட்புறமாக நாலைந்துமைல்வரையில் நீர் நிறைந்திருக்கும் ஒரு சதுப்பு நிலத்தைப் பார்க்கலாம். அதனுல்தான் இவ்விடம் உப்புச் சாகுபடி செய்ய நல்ல வசதியுள்ளதா யிருக்கிறது.

அதிவீரராமன் பட்டணத்திலிருந்து தெற்கே சென்ருல் கட்டுமாவடி என்னு மிடத்திற்குப் போகலாம். அதற்குத் தெற்கே சுமார் பதினைந்து மைலுக்கப்பால் மீன்மிசல் என்னும் ஓரூரிருக்கிறது. அதில் ஏற்கனவே தஞ்சாவூர் அரசர்களால் கட்டப்பட்ட சத்திரம் ஒன்று இருக்கிறது. இவ்வூரே சற்றேறக்குறைய அறந்தாங்கியின் தெற்கெல்லையாகும். அதற்குச் சிறிது தூரத்திற்கு அப்பால் இராமநாதபுரம் ஜில்லா ஆரம்பித்து விடுகிறது.

பயிற்சி

1. கடற்கரை யோரத்திலுள்ள முக்கிய துறைமுகங்களில் நான்கு சொல்லவும்.
2. பாண்டிய தேசத்து மன்னரால் எந்தத் துறைமுகம் அமைக்கப்பட்டது? அப்பாண்டிய அரசரது பெயரென்ன?
3. சோழஅரசரில்ஒருவருக்கு எந்தத் துறைமுகப்பட்டணம் தலைநகராக இருந்தது? அது இப்பொழுது எப்படி இருக்கிறது?
4. கோடிக்கரைக்குச் சமீபத்தில் சமுத்திர ஜலத்தின் நிறம் எவ்வாறுள்ளது?
5. டேனிஷ்காரர்கள் எந்தத்துறை முகத்தில் முக்கியமாக வசித்துவந்தார்கள்?

ஐந்தாம் பாடம்

ஜில்லாவின் சுற்றுப்பிரயாணம்—ரஸ்தாமார்க்கம்

பிள்ளைகளே! மீன்மிசலிலிருந்து படகைவிட்டிறங்கி ஒரு மோட்டார்க் காரில் ஏறிக்கொண்டால், ரஸ்தா மார்க்கமாய் அறந்தாங்கி வந்து சேரலாம். வழியில் இருக்கிற நிலத்தைப் பார்த்தால் பூமியின் மண் சிவப்பு நிறமாகக் காணப்படுகிறது.

இவ்விடத்தில் ஆறுகளில்லை. புன் செய்ப்பயிர் சாகுபடிதான் இவ்விடத்



மோட்டார்கார்.

தில் அதிகம். சிற்சில இடங்களில் பெரும்பாலும் துரவு கேணிகளிலிருந்தும் ஜலம் பாய்ச்சுகிறார்கள்.

மீன்மிசலுக்குப் பத்து மைல் மேற்கே ஆவுடையார் கோவில்



ஆவுடையார் கோவில்.

என்னும் பெயர்பெற்ற சிவஸ்தலம் ஒன்றிருக்கிறது. இவ்விடத்தில்தான் மாணிக்கவாசகர் சிவபெருமானிடமிருந்து உபதேசம் பெற்றார். இது மதுரை அரசர்களான பாண்டிய மன்னர்களின் மந்திரியான மாணிக்கவாசகரால் கட்டப்பெற்றது. இதில் மிகவும் அழகிய சிற்ப வேலைகளைப் பார்க்கலாம்.

இங்கிருந்து வடமேற்குப் பாகத்தில் சுமார் எட்டு மைலுக்கு அப்பாலுள்ள தாலூகாவின் தலைநகரான அறந்தாங்கிக்குப் போகலாம். இந்தக் கிராமத்தில் தான் மாயவரத்திலிருந்து வருகிற இருப்புப் பாதை முடிவடைகிறது. மோட்டார்க்காரை விட்டு விட்டுப் புகை வண்டியில் ஏறிக் கொள்ளலாம்.

இருப்புப் பாதையானது இங்கிருந்து கொஞ்ச தூரம் வடகிழக்காகச்சென்று, மறுபடியும் வடக்கே திரும்பிப் பட்டுக் கோட்டைக்குப் போய்ச் சேருகிறது. வழியில் கல்லணைக் கால்வாயையும் காணலாம். பட்டுக்கோட்டையிலிருந்து ரஸ்தா மார்க்கமாகத் தஞ்சாவூர் போகும் வழியில் பாப்பாநாடு என்னும் ஜமீன் கிராமம் இருப்பதைப் பார்க்கலாம். இவ்விடங்களில் புன்செய்ப் பயிர் சாகுபடி தான் மிகுதியாகச் செய்யப் படுகிறது. மார்க்கத்தில் பல முந்திரிக் காடுகளும், பலா, மா, முதலிய மரங்கள் நிறைந்த தோட்டங்களும் பல இடங்களில் காணப்படுகின்றன. புதிதாக வெட்டப்பட்டிருக்கிற கல்லணைக் கால்வாயின் கிளைகள் இங்கு ஓடுவதைக்காணலாம். வடக்கேசமுத்திரக் கரையோரத்திலுள்ள பிரதேசங்களில் இருக்கும் ஜனத்தொகையைக்காட்டிலும் அறந்தாங்கி, பட்டுக்கோட்டை தாலூகாக்களில் மிகக் குறைவாக இருப்பது தெரிகிறது.

பாப்பாநாட்டிலிருந்து சுமார் ஏழெட்டு மைல் சென்றால் ஒரத்தநாடு (உரத்தநாடு) என்னும் கிராமத்துக்கு வரலாம். இதில் ஒரு சத்திரம் இருக்

கிறது தஞ்சை நகரத்தை ஆண்ட மகாராஷ்டிர அரசர்களில் ஒருவராகிய சிவாஜி மகாராஜாவால் தன் ராணியான முக்தாம்பாள் ஞாபகார்த்தமாக இச்சத்திரம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஏராளமாக மானியங்கள் உண்டு. இச்சத்திரத்தின் ஆதரவில் ஒரு உயர்தரக் கலாசாலை நடை பெற்று வருகிறது. அதில் படிக்கும் பிள்ளைகளுக்குச் சம்பளமன்னியில் இலவசமாகச் சாப்பாடும் போடப்படுகிறது.

இங்கிருந்து பதினைந்து மைலுக்கப்பால் வடமேற்கில் இந்த ஜில்லாவுக்குத் தலை நகராகிய **தஞ்சாவூர்ப் பட்டணம்** அமைந்திருக்கிறது. அப்பட்டணத்தைச் சற்றுச் சுற்றிப் பார்க்கலாம். தஞ்சாவூர் புராதனமாக ஏற்பட்டதொரு நகரம். இது நமது ஜில்லாவின் மேற் கெல்லையில் அமைக்கப் பட்டிருக்கிறது.

இவ்விடத்தில் ரயில்வே ஜங்ஷன் இருப்பதைப் பார்க்கலாம். இங்கிருந்து கிழக்கே நாகப் பட்டணத்திற்கும், மேற்கே திருச்சிராப்பள்ளிக்கும் வடகிழக்கே மாயவரத்துக்கும் இருப்புப் பாதைகள் போகின்றன. இவ்விடத்திலிருந்து ரஸ்தாமார்க்கமாகத் திருவையாறு, திருக்காட்டுப்பள்ளி, கும்பகோணம், பட்டுக் கோட்டை, முதலிய இடங்களுக்கு மோட்டார் பஸ்கள் அடிக்கடி செல்கின்றன. ரயில்வே ஸ்டேஷனிலிருந்து சற்று கிழக்கே பட்டுக்கோட்டைக்குச் செல்லும் பஸ் நிற்கு மிடத்தைப் பார்க்கலாம். சற்று வடக்கே சென்றால் தஞ்சை முனிசிபல் ஆபீஸுக்கு அடுத்தாற்போல் மற்றொரு பஸ் ஸ்டாண்டு இருக்கிறது. இவ்விடத்திலிருந்து மோட்டார் பஸ்கள், திருவையாறு, கும்பகோணம் முதலிய இடங்களுக்குப் புறப்படுகின்றன.



தஞ்சை நகரம்

இந்த பஸ் நிற்கு மிடத்திற்கு எதிரில் ரஸ்தாவின் கிழ்ப் புறத்தில் ஒரு கட்டடம் தெரிவதைப் பார்க்கலாம். அது தான் **ராஜா சத்திரம்.**

இது மகாராஷ்டிர மன்னர் தர்ம சொத்துக்களுடைய வருவாயைக் கொண்டு, பிரயாணிகளின் வசதிக்காகச் சுமார் முப்பது வருஷங்களுக்கு முன் கட்டப் பட்டது. இங்கிருந்து வடக்கு முகமாகச் சற்று தூரம் சென்றால் ஒரு ஆற்றின் பாலத்தைக் காணலாம். இப்பாலத்தின் கீழ் ஓடும் ஆறுதான் புதிதாக வெட்டப்

பட்ட கல்லணைக் கால்வாய். இதன் தென் கரை வழியாக மேற்கே சென்ருல் தஞ்சை ஜில்லா கலெக்டர் கச்சேரி முதலியவை கட்டப்பட்டிருப்பதைக் காணக் கூடும்.



தஞ்சைக் கோவில்

அங்கிருந்து சிறிது மேற்கே சென்ருல் பெரிய கோபுரம் ஒன்று தெரியும். அதுதான் பிரஹதீச்வாஸ்வாமி கோவிலாகும். இது சுமார் ஆயிரம் வருஷங்களுக்கு முன் சோழ நாட்டரசரான மும் முடிச் சோழர் என்று பெயர் வாய்ந்த ராஜ ராஜ சோழ தேவரால் கட்டப் பட்டது. தென்னிந்தியாவில் முதன் முதலில் கட்டப் பட்ட பெரிய கோவில் இது தான். இதன் விமானம் மிகப் பெரியது. இதற்குக் கற்களால் கலசம் அமைக்கப்பட்டிருக்கிறது. அக்கலசம் சுமார் பதினறடி குறுக் களவுள்ளது. இதன் கோபுரம் தென்னிந்தியாவில் கட்டப்பட்ட கோபுரங்களுள் முதல் கோபுரமாகும். ஆனல் விமானத்தை விடக் கோபுரம் சற்றுச் சிறிதாயிருப்பதைக் காணலாம். இக் கோவிலுக்குள் சென்று பார்த்தால் சுவர்களின் மேல் பல கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவை ராஜ ராஜ சோழரின் செய்கைகளை விளம்பரஞ் செய்கின்றன.



நந்தி

கோவிலின் முன் பக்கத்தில் ஒரே கல்லால் செதுக்கப்பட்ட நந்தி ஒன்றிருக்கிறது. இது சுமார் பத்து அடி உயரம் உள்ளதாகும். கோவிலுக்குத் தெற்கே கோட்டை மதிலும், அகழியும் இருக்கின்றன. இவ்வகழியின் வழியாகக் கல்லணைக் கால்வாய் செல்வதைக் காணக்கூடும். பிறகு சற்று வட மேற்கில் குளமும், தோட்டமும் இருப்பதைக் கவனியுங்கள். குளத்திற்குச் சிவகங்கைக் குளம் என்று பெயர். இந்த ஜலம் சிவப்பு நிறமுள்ளதாய் இருக்கிறது. இதுதான் நீர்க் குழாய்கள் ஏற்படுவதற்கு முன் குடி தண்ணீருக்கு உபயோகமாகி வந்தது. இப்பொழுதும் இதன் தண்ணீரைப் பலர் குடிக்கிருர்கள். இதனருகில் தஞ்சை ஜில்லா கல்வியதிகாரியின் கச்சேரியும் போதன முறைப் பாடசாலையும் உள்ளன.

இங்கிருந்து கிழக்கே சென்ருல், மற்ருெரு பாலக்கரைக்கு வந்து சேரலாம். இதுதான் தஞ்சாவூர்க் கோட்டையைச் சுற்றிவரும் அகழியைக் கடக்க ஏற்பட்டுள்ள பாலம். இத

னருகில் யூனியன் கிளப் என்ற பொழுது போக்குக்காக ஏற்பட்ட வாசகசாலையும், விளையாட்டிடமும் இருப்பதைப்பார்க்கலாம். இதற்குக் கீழ்ப்புறமாகச் சிறிது தூரத்தில் மேலத் தஞ்சை ஜில்லா போர்டு ஆபீஸ் கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. யூனியன் கிளப்புக்குச் சற்று



தஞ்சை தர்பார் மஹால்.

மேற்கே ஒரு நாடகக் கொட்டகை கட்டப்பட்டிருப்பதைக் காணலாம். அதற்கு எதிரில் மணிக்கூண்டு ஒன்றிருக்கிறது. அங்கிருந்து சற்று மேற்கே சென்றால் ஜில்லா ஆஸ்பத்திரியும், ஸ்திரீகளுக்கும், குழந்தைகளுக்கும் சிகிச்சை செய்யும் ஆஸ்பத்திரியும், மணிக்கூண்டுக்குத் தென்புறமாகக் கண்ணாஸ்பத்திரியும்இருப்பதைப் பார்க்கலாம். பாலத்திலிருந்து சற்று வடக்கே சென்றால் பெரிய ராஜ வீதியை அடையலாம். கீழ ராஜ வீதியில் பழைய மகாராஷ்டிர அரசர்களின் அரண்மனை இருக்கிறது.

அதற்குச்சென்றால் மகாராஷ்டிர அரசர்களின் தர்பார் ஹால் (கொலு

சிவாஜி.

மண்டபம்) ஒன்றிருப்பதைப் பாருங்கள். இந்த ஹாலின் ஒரு புறத்தில் இருக்கும் சலவைக் கற்சிலையானது, கடைசியாக அரசுபுரிந்த மகாராஷ்டிர மன்னரான சிவாஜி மன்னரின் கற்சிலையாகும். இங்குள்ள சரஸ்வதி மஹால் என்ற ஒருயர்ந்த புத்தகசாலைக்குள் சென்று பார்த்தால் புராதனமான சுவடிகளும், புத்தகங்களும், கையெழுத்துப் பிரதிகளும் ஏராளமா யிருப்பதைக் காணலாம்.

அரண்மனையி லிருந்து சற்று வடமேற்காகச் சென்றால் அய்யன்கடைத் தெரு என்று பெயர் வாய்ந்த ஒரு பெரிய கடைவீதி இருக்கிறது. இவ்வூரில் முக்கியமான கைத்தொழிலான நெட்டியினால் செய்யப்பட்ட பல சாமான்கள் விற்கின்றன. இவ்வூர் கண்ணாடியில் எழுதப்பட்ட வர்ணப் படங்களுக்குப் பெயர்போனது. இப்படங்களையும் ஏராளமாய் இங்கே காணலாம்.

கோட்டை வாயிலிருந்து வடக்கே சென்றால் சுமார் அரைமைலுக்கு அப்பால் வடவாற்றங்கரைப் பாலத்துக்கு வரலாம். அதற்கு வடக்கே

சிறிது தூரத்தில் தஞ்சாவூருக்கு உப நகரமான கரந்தை என்னும் கருந்தட்டான் குடி இருக்கிறது. இங்கே ஒரு தமிழ்ச் சங்கமிருக்கிறது. இதில் ஏழைமாணவர்களுக்கு உணவளித்து, சம்பளமின்றிக் கல்வியும் கைத்தொழிலும் கற்பிக்கப்படுகிறது. இதற்கு வடக்கே சுமார் அரை மைலுக்கு அப்பால் மற்ருெரு பாலமிருக்கிறது. இதுதான் வெண்ணுற்றின் பாலம். இது தஞ்சை நகரின் வடக் கெல்லையாகும். இவ்வாற்றைக் கடந்துதான் ரஸ்தாவானது கும்பகோணத்திற்கும், திருவையாற்றிற்கும் போகிறது. இவ்வாற்றிலிருந்துதான் பல குடி தண்ணீர்க் குழாய்கள் தஞ்சாவூர் நகரம் முழுவதும் சென்று நல்ல குடி தண்ணீரைக் கொடுக்கின்றன. இந்த நகரத்தில் கிறிஸ்தவர்கள் ஏராளமாய் வசிக்கிருர்கள். அவர்கள் முக்கியமாக இருக்குமிடம் நகரத்திற்குக் கிழக்கேயுள்ள மகர்நோன்புச் சாவடி என்பதே. இங்கே பல மாதா கோவில்கள் கட்டப்பட்டுள்ளன.

இத் தஞ்சை நகரில் பிருகதீச்வர ஸ்வாமியின் பெரிய கோவிலைத்தவிர, காமாட்சியம்மன் கோவில், வெங்கடேசப்பெருமாள் கோவில் என்ற பல்வேறு கோவில்களும் உண்டு. கர்நாடக சங்கீதத்தில் பெயர் பெற்றவரும் அநேக பாடல்களைப் பாடியிருப்பவருமான சாமா சாஸ்திரிகள் என்பவர் காமாட்சியம்மன் கோவிலில் வெகுகாலம் கைங்கரியம் செய்து கொண்டு வந்தார். இவரது குமாரரான சுப்பராய சாஸ்திரிகள் என்பவரும் தன் தந்தை போலவே சங்கீதத்தில் தேர்ச்சிபெற்றுப் பல பாடல்கள் இயற்றிப் புகழ் பெற்றிருக்கிருர். இவ்வூரில் அநேக ஹைஸ்கூல்கள் உண்டு. கிறிஸ்தவப் பாதிரிமார்களால் ஏற்படுத்தப்பட்ட ஒரு சிறந்த ஹைஸ்கூல் வடக்கு ராஜவீதியில் இருப்பதைப் பார்க்கலாம். இது சுமார் இருபது வருஷங்களுக்கு முன் உயர்தரக் கல்லூரி (College) யாக இருந்த காலத்து, இதில் படித்த பலர் பெரிய பதவியில் அமர்ந் திருக்கிருர்கள். இவ்வூரில் பெண்கள் கல்வி கற்பதற்கெனத் தனியாக ஒரு ஹைஸ்கூலு மிருக்கிறது.

பயிற்சி

1. மீன்மிசலிலிருந்து அறந்தாங்கி வரும்பொழுது எந்தச் சிவஸ்தலம் இடையில் உள்ளது? அந்தச் சிவஸ்தலத்தின் விசேஷமென்ன?
2. அறந்தாங்கிக்குச்சமீபத்தில்பொதுவாகப் பூமியின் அமைப்பு எப்படி இருக்கிறது?
3. பட்டுக்கோட்டையிலிருந்து உரத்தனுட்டுக்குச் செல்லும் வழியில், முக்கியமான எந்த நதியைக் காண்கிருய்?
4. உரத்தனுட்டில் என்ன விசேஷம் இருக்கிறது?
5. தஞ்சாவூர்ப் பட்டணத்தின் முக்கிய காட்சிகள் யாவை?
6. பிருகதீச்வர ஸ்வாமி கோவிலில் முதல் பிராகாரத்தில் என்ன காண்கிருய்?
7. பிராகாரத்தின் சுவர்களின்மேல் என்ன செய்யப்பட்டிருக்கிறது?
8. இக்கோவில் யாரால் கட்டப்பட்டது?
9. இக்கோவிலின் முதற் புறத்திலுள்ள அகழியில் இப்பொழுது என்ன இருக்கிறது?
10. சிவகங்கை என்பதென்ன? அது எங்கே இருக்கிறது?
11. இப்பட்டணம் எந்த முக்கியத் தொழிலுக்குப் பெயர் பெற்றது?
12. அரண்மனை இந்தப் பட்டணத்தின் எந்தப் பாகத்தில் இருக்கிறது?
13. அரண்மனைக்குள் என்ன விசேஷம் காண்கிருய்?
14. தஞ்சாவூர்ப் பட்டணத்தின் ஒரு தரைப்படம் வரைந்து அதன் முக்கியமான இடங்களை அதில் குறிப்பிடவும்.


தஞ்சாவூர் ஜில்லா
தென் ஆற்காடு ஜில்லா
திருச்சிராப்பள்ளி ஜில்லா
கொள்ளிடம்
கொள்ளிடம்
சீர்காழி
வைத்தீஸ்வரன் கோயில்
தரங்கம்பாடி
மாயவரம்
கும்பகோணம்
காரைக்கால்
நன்னிலம்
நாகூர்
நாகபட்டணம்
வேளாங்கண்ணி
பாபநாசம்
திருவையாறு
திருக்காட்டுப்பள்ளி
சிங்கம்பட்டி
மன்னார்குடி
திருவாரூர்
ஒரத்தநாடு
திருத்துறைப்பூண்டி
வேதாரணியம்
தோப்புத்துறை
முத்துப்பேட்டை
அதிராம்பட்டணம்
அகஸ்தியம்பள்ளி
பட்டுக்கோட்டை
புதுக்கோட்டை சமஸ்தானம்
பாக்ஸ் ஜலசந்தி
அறந்தாங்கி
கட்டுமாவடி
அறந்தாங்கி தாலூகா
மீமிசல்
சாலை
இருப்புப்பாதை
கால்வாய்
எல்லைக்கோடு

ஆறாம் பாடம்

ஜில்லாவின் சுற்றுப் பிரயாணம், ரயில் மார்க்கம்

தஞ்சாவூர் ஜங்ஷனிலிருந்து ஒருவன் ரயில் மார்க்கமாகப் புறப்பட்டால், இரண்டு இருப்புப் பாதைகள் அங்கிருந்து கிழக்கு நோக்கிச் செல்வதைப் பார்க்கலாம். ஒன்று கொஞ்ச தூரம் சென்றதும் வடக்காகத் திரும்புகிறது. அப்பாதை வழியாகப் பிரயாணம் செய்தால், அடுத்த ஸ்டேஷன்:வடவாறு ஆகும். அது வரையில் பூமி மேட்டுப்பாங்காக இருக்கிறது. மண்ணின் நிறம் செவ்வலாக இருக்கிறது. வட வாற்றிலிருந்து வடக்கே சென்றால் இருப்புப்பாதையின் இரு பக்கத்திலும் ஒரே நெற்பயிர் செய்யும் நன்செய் நிலங்களாக இருக்கின்றன. பூமியின் செவ்வல் நிறம்மாறி ஒருவிதமான பழுப்பு நிறமாகக் காணப்படுகிறது. போகும் வழியில் வெண்ணாறு, வெட்டாறு, முதலிய ஆறுகளைக் கடந்து செல்ல வேண்டி யிருக்கிறது.



ரயில்

பிறகு அய்யம்பேட்டை வரையில் இருப்புப்பாதை வடக்கு நேராகச் செல்லுகிறது. இரு பக்கங்களிலும் மரங்கள் அடர்ந்த அனேக கிராமங்கள் தென்படுகின்றன. பெரும்பாலும் தென்னை மரங்கள் அடர்ந்த தோப்புக்களே அதிகம். அய்யம்பேட்டைக்கு அப்பால் இருப்புப் பாதை கிழக்கு முகமாகத் திரும்பிச் செல்வதைக் காணலாம்.

பாபனாசம் வரையில் சுமார் ஆறு அல்லது ஏழு மைல்களுக்கு இருப்புப் பாதையின் இரு பக்கங்களிலும் அநேக இடங்களில் வெற்றிலைக் கொடிக் கால்கள் தென்படுகின்றன. பண்டாரவாடை ஸ்டேஷனில் பல மகமதியர்கள் வெற்றிலை வியாபாரத்திற்காக வந்திருப்பதைக் காணலாம். வெற்றிலை ஏராளமாகச் சென்னபட்டணம் வரையிலுள்ள பல ஊர்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. பாபனாசம் முதல், பத்து மைலுக் கப்பாலிருக்கும் கும்பகோணம் வரையில், வாழைத் தோட்டங்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. பாபனாசத்துக்கடுத்த உத்தானி என்னும் கிராமத்திற்கு அருகில் இருப்புப்பாதையானது குடமுருட்டி என்னும் காவேரிக் கிளை நதியையும், அதன் கிளை நதியான திருமலைராஜன் என்னும் நதியையும் கடந்து. சுந்தரப்பெருமாள் கோவில் ஸ்டேஷனை அடைகிறது. பாபனாசம், சுந்தரப்பெருமாள்கோவில், என்னும் ஸ்டேஷன்களில் நெல் மூட்டைகள் ஏராளமாக ஏற்றுமதி செய்யப்படுவதைக் காணலாம். புன்செய்ப் பயிர்களான கருணைக்கிழங்கு, சேப்பங்கிழங்கு, பச்சை மிளகாய் முதலியவை, இங்கு மிகுதியாய்ச் சாகுபடி செய்யப்பட்டுப் பல விடங்களுக்கும் அனுப்பப்படுகின்

றன. தென்னந் தோப்புக்கள் மிகுதியினால், தேங்காய்களும், வண்டி வண்டியாய்ப் பல இடங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

இதற்கப்பால் ஸ்வாமிமலை ஸ்டேஷன் இருக்கிறது. இது திருவலஞ்சுழி என்னும் கிராமத்தில் அமைக்கப்பட்டிருந்தாலும், ஒரு மைலுக்கு அப்பால் வடக்கே ஸ்வாமிமலை என்னும் சுப்பிரமணிய க்ஷேத்திரம் இருப்பதால், இதற்குச் சுவாமிமலை என்றே பெயர் வைக்கப்பட்டிருக்கின்றது. இதற் கடுத்தது தாராசுரம். இதனைக் கும்பகோணத்திற்கு மேற்கெல்லை யென்றே சொல்லலாம். இதில் பித்தளைச் சாமான்கள் தயாரிக்கப் படுகின்றன. இவ்விடத்தில் சோழ மன்னர்களில் ஒருவரும், மிக்க புகழ் பெற்றவருமான மூன்றும் குலோத்துங்கச் சோழரால், மிக அழகிய ஒரு கோவில் கட்டப்பட்டிருக்கிறது.

இதிலும் தஞ்சாவூர் பெரிய கோவிலைப்போல் பெரியவிமானம் அமைக்கப்பட்டிருக்கிறது. மூன்றும் குலோத்துங்கச் சோழருக்கு ராஜராஜேஸ்வரர் என்ற பட்ட மிருந்ததனால் இக்கோவிலுக்கும் ராஜராஜேஸ்வரம் என்று பெயர் ஏற்பட்டது. நாளடைவில் அப்பெயரானது தாராசுரம் என்று மாற்றப்பட்டுப் போய்விட்டது.

இதற்கு அடுத்த ஸ்டேஷன் கும்பகோணம். தஞ்சாவூர் ஜில்லாவில் இது ஒரு பெரிய பட்டணம். ஜனத்தொகையிலும். ஐஸ்வரியத்திலும், தல மகிமையிலும் மிகவும் பெயர் வாய்ந்தது. ஸ்டேஷனில் இறங்கி ஊரைச் சுற்றிப்பார்த்தால், இங்கே அனேக பெரிய கோவில்கள் அமைந்திருப்பதைப் பார்க்கலாம். சிவன் கோவில்களுக்குள் மிகவும் முக்கியமானது கும்பேஸ்வர ஸ்வாமி கோவில். இது கடைவீதிக்குத் தென்மேற்கில் கட்டப்பட்டிருக்கிறது. விஷ்ணு ஆலயங்களில் முக்கியமானது ஸ்ரீ சங்கரபாணிஸ்வாமி கோவில். இதுவும் கடைவீதிக்குச் சற்றுக்கீழ்ப்புறத்தில் அமைந்திருக்கிறது. இக்கோவில் தஞ்சையிலிருந்து அரசுபுரிந்து



கும்பகோணம் மஹா மஹம்

வந்த நாயக மன்னரால் கட்டப்பட்டதெனத்தெரிகிறது. இதன் மேல் பாகத்தில் பொற்றாமரை என்னும் தடாகம் அமைந்திருக்கிறது. ஆனால், இவ்வூரில் மிகவும் கீர்த்தி பெற்ற புண்ணிய தீர்த்தம், மகா மகக் குளம் என்று சொல்லப்படும் ஒரு தடாகம். இது ரயில்வே ஸ்டேஷனிலிருந்து மேற்கே சுமார் இரண்டு பர்லாங்குக்கு உள்ளாகவே இருப்பதைக் காணலாம். இதில் பன்னிரண்டு வருஷங்கட்கு ஒரு முறை நடைபெறுகிற மகாமக மென்னும் மகோற்சவ காலத்தில், லட்சக்கணக்கான ஜனங்கள் இந்தியாவின் பலபாகங்களிலிருந்தும் தீர்த்தாடனம் செய்ய வருகிறார்கள். அக்காலங்களில் ரயில்வே அதிகாரிகளும், முனிசிபல்

அதிகாரிகளும், திரள்திரளாக வரும் பிரயாணிகளுக்கு நல்ல வசதிகள் செய்துவருகிருர்கள். இந்நகரத்தில் வடக்குப் பாகத்தில் காவிரி நதியும், தெற்குப் பாகத்தில் காவிரியின் கிளை நதியான அரசலாறும் ஓடுகின்றன. காவிரியின் வடகரையில் ஒரு உயர் தரக் கல்லூரியும் (College), மற்ற விடங்களில் நான்கு உயர்தரக் கலா சாலைகளும் (High School) இருக்கின் றன.

இக்கும்பகோணம் பெரியதொரு வியாபாரஸ்தலம். இங்குப் பித்தளை, வெண்கலம், முதலியவற்ருல் ஆன பாத்திரங்கள் ஏராளமாகச் செய்யப் படுகின்றன. ஈயம், வெள்ளி முதலிய பாத்திரங்களும் இவ்விடத்தில் மிகு தியாகவியாபாரமாகின்றன. சமீபத்தி லுள்ள பல விடங்களிலிருந்து கை நெசவுத் தொழில் ஜவுளிகள் இங்கு அதிகமாக விற்கப்படுகின்றன. இந் நகரத்தின் வடமேற்குப் பாகமான மேலைக்காவிரி என்னும் இடத்தில் வெற்றிலைக் கொடிக்கால்கள் ஏராள மாய் இருப்பதைப் பார்க்கலாம். ராஜகிரி, பண்டாரவாடை முதலிய விடங்களிற்போல, இங்குப் பயிரா கும் வெற்றிலையும் இவ்வூரிலிருந்து சென்னை வரையிலுள்ள பல ஊர் களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

கும்பகோணத்திலிருந்து வடகிழக் காக ரயில்பாதை மூலம் பிரயாணம் செய்தால், திருவிடைமருதூர், ஆடு துறை, குற்ருலம் முதலிய இடங் களைக் கடந்து மாயவரம் வரலாம். இரு பக்கங்களிலும் நன்செய் நிலங் களும், வாழை, தென்னை முதலான பல விருட்சங்கள் அடர்ந்த தோப் புக்களும் காணப்படுகின்றன. கும்ப கோணத்துக்கு அடுத்த திருநாகேஸ் வரம் என்னும் ஸ்டேஷனிலிறங்கி, புகழ்பெற்ற விஷ்ணு ஸ்தலமாகிய உப்பிலியப்பன் கோவில் (ஒப்பிலி யப்பன் கோவில்) என்னுமிடத்திற்கு வரலாம். திருநாகேஸ்வரம் நெசவுத் தொழிலுக்குப் பெயர் பெற்ற ஊர். திருவிடமருதூர் மிகவும் உயர்ந்த சிவஸ்தலங்களுள் ஒன்று அங்கே ஒரு ஹைஸ்கூலுமிருக்கிறது. மூன்ருவது குலோத்துங்கச் சோழ தேவர் தமக்கு ஏற்பட்ட பிரமஹத்தி தோஷத்தி லிருந்து விடுபட்டார் என்பது ஓர் ஐதிகம். இக் கோவி லின் மேற்பக்கத்தி லிருக்கும் மதிலை இடித்துச் சோழ மன்னர் தம்மைப் பிரமஹத்தி பிடித்துக் கொள்ளாமல் இருக்கக் கொஞ்சதூரம் சென்றபின் திரும்பிப் பார்த்த இடத்திற்குத் திருப்புவனம் என்ற பெயரிட்டனர். இங்கு ஒரு கோவிலும் கட்டி வைத்த தாகச் சொல்லப்படுகிறது. அவ்விடத் தைத்தான் இப்பொழுது திருப்பு வனம் என்று கூறுகின்றனர்.

திருவிடமருதூரிலிருந்து வடக்கே சென்ருல், நாரசிங்கன்பேட்டை, குற் ருலம் முதலிய இடங்களைப் பார்க்க லாம். இவ்விடங்களிலும், ஏராள மான வாழைத் தோட்டங்கள், தென் னந்தோப்புக்கள், நன்செய் நிலங்கள் இருக்கின்றன. இதற்கப்பால் மல்லி யம் என்னும் ஸ்டேஷனைத் தாண்டி மாயவரம் வந்து சேரலாம். இதற்கு வடக்கே வைத்தீஸ்வரன் கோயில், சீர் காழி, முதலிய ஸ்டேஷன்கள் இருக் கின்றன. மாயவரத்தின் வழியாகக் காவேரியானது மிகவும் குறுகலாகக் கிழக்குச் சமுத்திரத்தை நோக்கி ஓடு கிறது. ஐப்பசி மாதத்தில் துலாக் காவேரி ஸ்னானத்திற்காக ஏராள மான ஜனங்கள் இங்கே கூடுகிருர் கள். மாயவரம் ஸ்டேஷனிலிருந்து இருப்புப்பாதையின் ஒரு கிளை சுமார்

பதினெட்டு மைல் தூரத்திற் கப்பாலுள்ள தரங்கம்பாடிவரையில் போவதைப் பார்க்கலாம். இதன் நடுவே திருக்கடையூர் என்ற, மார்க்கண்டேயர் முக்திபெற்ற ஒரு சிவஸ்தலமிருக்கிறது.

மாயவரம் ஸ்டேஷனி லிருந்து ரயில் மார்க்கமாகத் தெற்கே சென்றால் இடையில் **பேரளம் நன்னிலம்** முதலிய ஸ்டேஷன்களைத் தாண்டிக் கொண்டு, சுமார் இருபத்தைந்து மைலுக் கப்பாலுள்ள **திருவாரூர்** என்னும் க்ஷேத்திரத்துக்கு வரலாம். பேரளத்திலிருந்து பிரஞ்சு இலாகாவான **காரைக்காலுக்கு** இருப்புப்பாதையின் கிளை யொன்று செல்லுகிறது. திருவாரூர் வரையிலுள்ள எல்லா ஸ்டேஷன்களிலும் நெல் மூட்டைகள் ஏராளமாய் ஏற்றப்படுவதைக் காணலாம்.

திருவாரூர் ஷ்டேஷனில் நான்கு இருப்புப் பாதைகள் கூடுகின்றன. ஒன்று பதினைந்து மைலுக்கப்பால் கிழக்கே **நாகப்பட்டணம்** வரையில் செல்லுகிறது. மற்றொன்று சுமார் பதினைந்து மைலுக்கப்பால் திருத்துறைப்பூண்டி வரையில் போகிறது. இன்னொரு கிளைப்பாதை மேற்கு முகமாகக் கொரடாச்சேரி, நீடாமங்கலம், அம்மாபேட்டை வழியாகத் தஞ்சாவூர் போய்ச் சேருகிறது, திருத்துறைப்பூண்டியி லிருந்து ஒருகிளைப் பாதை தென் கிழக்காக **வேதாரணி**யம் வழியாய்க் **கோடிக்கரை** வரையில் செல்லுகிறது. மற்றொரு பாதை முத்துப் பேட்டை, அதிராம் பட்டணம் வழியாகப் பட்டுக்கோட்டை செல்லுகிறது. இதுதான் தெற்கே அறந்தாங்கி வரையில் செல்லுகிறது. நீடாமங்கலம் ஷ்டேஷனிலிருந்து ஒரு சிறு இருப்புப்பாதை தெற்கே சுமார் பத்து மைலுக்கப்பால் **மன்னார்குடி** வரையில் செல்லுகிறதைக் காணலாம். எங்குப்பார்த்தாலும் இம்மார்க்கங்களிலெல்லாம் இரு பக்கங்களிலும் ஒரே நன்செய் வயல்களாகவே காணப்படுகின்றன.

பயிற்சி

1 தஞ்சாவூரிலிருந்து இருப்புப்பாதை வழியாக மாயவரம் வரையில் செல்லும் பொழுது இடையேயுள்ள ஸ்டேஷன்களுள், முக்கியமான பத்து ஸ்டேஷன்களை எழுதவும்.

2 தஞ்சாவூரிலிருந்து கிழக்கு முகமாகச் சென்றால் பூமிமட்டமானது எப்படித் தெரியவருகிறது ?

3 நிலத்தின் அமைப்பு என்ன ?

4 நெல் ஏற்றுமதியாகும் முக்கியமான சில ஸ்டேஷன்களைக் கூறுக ?

5 நெல் வயல்களைத் தவிர வேறு காட்சிகள் என்ன காண்கின்றாய் ?

6 ஸ்வாமிமலை ஸ்டேஷனிலிருந்து ஸ்தலமானது எவ்வளவு தூரத்திலிருக்கிறது?

7 ஸ்வாமி மலைக்கும், கும்பகோணத்துக்கும் எவ்வளவு தூரம் ?

8 கும்பகோணத்திலிருக்கிற முக்கிய கோவில்களுள் இரண்டு கூறுக ?

9 இவ்வூரில் உயர்தரக் கல்லூரி எங்கே இருக்கிறது ?

10 திருவிட மருதூரில் உள்ள விசேஷமென்ன ?

11 மாயவரத்துக்கு எந்த மாதத்தில் பிரயாணிகள் அதிகமாக வருகிறார்கள் ? ஏன் ?

12 இவ்வூரிலிருந்து எவ்விடத்துக்கு இருப்புப்பாதையின் கிளையொன்று செலலுகிறது ?

13 காரைக்கால் எங்கே உள்ளது ? அது யாரைச் சேர்ந்தது ?

14 அவ்வூரில் நடக்கும் உற்சவத்தின் பெயரென்ன ?

15 அதற்குச் செல்லும் இருப்புப் பாதை எங்கிருந்து புறப்படுகிறது ?

16 திருவாரூரில் எத்தெந்த இருப்புப்பாதைகள் கூடுகின்றன ?

ஏழாம் பாடம்

சீதோஷ்ணம்

தஞ்சாவூர் ஜில்லாவானது பெரும்பாலும் உஷ்ணமான பிரதேசம் என்றே சொல்லலாம். ஒரு வருஷத்தில் சுமார் நான்கு அல்லது ஐந்து மாதங்களைத் தவிரப் பாக்கி மாதங்களிலெல்லாம் உஷ்ணம் அதிகமாயிருக்கிறது. சமுத்திரக் கரையோரங்களிலுள்ள பிரதேசங்களில் சமுத்திரக் காற்றினால் உஷ்ணத்தின் கடுமையானது சாயங்கால வேளையில் சற்றுக் குறைவாக இருக்கிறது. உள்நாட்டுப் பிரதேசங்களில் நல்ல கோடைக் காலங்களில் எப்பொழுதாவது மழை பெய்தாலொழிய, பெரும்பாலும் சூரிய வெப்பத்தின் கொடுமையால், ஜனங்கள் அவஸ்தைப் படுகிறார்கள். ஏப்ரல் முதல் மே, ஜூன் வரையில், கடுமையான கோடைக்காலம். பிறகு ஜூன், ஜூலை மாதங்களில், மேற்குக் கடலிலிருந்து அடிக்கும் தென்மேற்குப் பருவக்காற்றினால் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் ஏராளமாய் மழை பெய்கிறது. ஒரு தேசத்தில் மழை பெய்வதற்கு முக்கியமான காரணம், நீருண்ட மேகங்களைக்கொண்டு வருங் காற்றே.

தென் மேற்குப் பருவக்காற்றினால் அராபிக் கடலிலிருந்து ஏராளமான மேகங்கள் கொண்டுவரப்பட்டபோதிலும், மேற்குத் தொடர்ச்சி மலையினால் அம் மேகங்கள் தடுக்கப்படுகின்றன. மேகங்களின் மழையினால் ஆறுகளில் பிரவாகம் அதிகமாக ஏற்படுகிறது. தஞ்சாவூர் ஜில்லாவில் முக்கியமாக ஓடும் ஆறு காவிரி என்று ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறோம். அதில் இப் பருவக் காற்றின் பலனாக ஜூலை. ஆகஸ்டு மாதங்களில் ஏராளமாக ஜலம் ஓடுகிறது. சில நாட்களில் இக்காலத்தில் மேகங்கள் பர்வதத்



தென்மேற்குப் பருவக் காற்று

தைக் கடந்து உள் நாட்டிலும் மழை பெய்வது உண்டு. இது, இடி, மின்னலுடன் ஜாஸ்தியாக இருக்கும். இதற்குக் கோடை மழை என்பது பெயர். பிறகு அக்டோபர் நவம்பர் மாதங்களில் வட கிழக்குப் பருவக் காற்றினால் நமது ஜில்லாவில் ஏராளமாக மழை பெய்கிறது. டிசம்பர், ஜனவரி மாதங்களில் பனி பெய்கிறது. ஆகையால், அக்டோபர் மாதம் முதல், ஜனவரி மாதம் முடிய நான்கு மாதங்களிலும் சூரிய வெப்



வடகிழக்குப் பருவக் காற்று

பத்தின் கொடுமை மிகத் தணிவாயிருக்கிறது. சமுத்திரக் கரை

ஓரத்தில் மழைக் காலங்களில் சுமார் நாற்பது அங்குலம் வரையில் மழை பெய்கிறது. ஜில்லாவின் மத்திய பிரதேசத்தில் அதைக் காட்டிலும் பத்து அங்குலம் குறைவாகவும், மேற் கெல்லைக்குச் சமீபத்தில் இன்னும் குறைவாகவும் பெய்கிறது.

"நில வசதியும் நீர்ப்பாசனமும்"

காவிரியாற்றின் வண்டல் ஜலத்தினால் தஞ்சை ஜில்லாவின் நிலமானது மிகவும் செழிப்பாகச் செய்யப்பட்டிருக்கிறது. நெல் விளைவின் மிகுதியினால் தஞ்சை ஜில்லாவானது தென்னிந்தியாவின் நெற் களஞ்சியம் என்று பெயர் பெற்று வருகிறது. ஆற்றோரங்களில் உள்ள பூமியானது வண்டல் நிலமாகவும் மற்ற இடங்களில் களிமண் நிலமாகவும், பெரும்பாலும் அமைந்துள்ளது. செவ்வல் நிறமான மண் இந்த ஜில்லாவின் மேட்டுப்பாங்கான மன்னார் குடி பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் தாலூகாக்களில் இருக்கிறது. நாகப் பட்டணம் தாலூகாவில் சில விடங்கள் சுண்ணாம்பு கலந்த உவர் மண் நிலமாக இருக்கின்றன. திருத்துறைப் பூண்டித் தாலூகாவின் தென்பாகத்தில் கசிவுள்ள உப்பு மண் அதிகம். ஆகையால் செம்மண் பிரதேசத்தில் புன்செய்ப்பயிர்களும், பலா, மா முதலிய மரங்களும், வண்டல் மண், களிமண், உள்ள பிரதேசங்களில் நன்செய்ப் பயிர்களும், வாழை, தென்னை முதலிய மரங்களும் செழிப்பாய் வளர்கின்றன.

குறிப்பு:—இந்தஜில்லாவின்முக்கியமான மண்களாவன:—(1) செம்மண், (2) களிமண், (3) காவேரி வண்டல், (4) உவர் மண், (5) சரளை என்பன.

அவைகள் முக்கியமாகக் காணப்படும் இடங்கள்:—(1) **செம்மண்** மன்னார்குடி, தஞ்சாவூர், பட்டுக்கோட்டை அறந்தாங்கி தாலூகாக்கள். (2) **களிமண்:** முதன்மையாகக் கருதப்படுபவை நாகப்பட்டணம், திருத்துறைப் பூண்டி, மன்னார்குடி தாலூகாக்கள். இரண்டாவதாகக் கருதப் படுபவை தஞ்சாவூர், நன்னிலம், கும்பகோணம் பாபநாசம், மாயவரம் தாலூகாக்கள்.

(3) **வண்டல்-** சீர்காழி, மாயவரம் கும்பகோணம், நன்னிலம் தாலூகாக்கள்.

(4) **உவர்மண்-** சீர்காழி, நாகப்பட்டணம், திருத்துறைப் பூண்டி தாலூகாக்கள்.

(5) **சரளை-**தஞ்சாவூர், அறந்தாங்கி தாலூகாக்கள். இம்மண்களின் வித்தியாசங்களை ஸ்கூல் மியூஸியத்திலிருக்கும் மாதிரிகளால் அறியவும்.

பயிற்சி

1 தஞ்சாவூர் ஜில்லாவின் சீதோஷ்ண ஸ்திதியைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?
2 எம் மாதங்கள் கோடைக்காலம்? எம் மாதங்கள் மாரிக்காலம்?
3 இவ்விடத்தில் அடிக்கும் பருவக்காற்றுக்கள் யாவை?
4 அவைகளின் பயனென்ன?
5 இந்த ஜில்லாவிலுள்ள முக்கியமான மண்கள் என்ன? அவை எங்கெங்கே அதிகமாயிருக்கின்றன?

விளை பொருள்கள்.

ஆறுகளின் மிகுதியால் இந்த ஜில்லாவில் நன்செய் சாகுபடியே பெரும்பாலான இடங்களில் நடந்து வருகிறது. பாபநாசம், கும்பகோணம், மாயவரம், நன்னிலம், நாகப் பட்டணம் முதலிய தாலூகாக்களில் பல ஆண்டுகளாக நெல் சாகுபடியே

தஞ்சாவூர் ஜில்லா
தென் ஆற்காடு ஜில்லா
திருச்சிராப்பள்ளி ஜில்லா
கொள்ளிடம்
சீர்காழி தாலூகா
மாயவரம் தாலூகா
கும்பகோணம் தாலூகா
பாபநாசம் தாலூகா
நன்னிலம் தாலூகா
தஞ்சாவூர் தாலூகா
மன்னார்குடி தாலூகா
நாகபட்டணம் தாலூகா
பட்டுக்கோட்டை தாலூகா
திருத்துறைப்பூண்டி தாலூகா
புதுக்கோட்டை சமஸ்தானம்
அறந்தாங்கி தாலூகா
இராமனாதபுரம் ஜில்லா
பாக்ஸ் ஜலசந்தி
வங்காளக் குடாக்கடல்
நெல்
நெசவு
வாழை
தென்னை
வெற்றிலை
புகையிலை
கரும்பு
உப்பு
நகைகள்
பருத்தி
துவரை
கம்பளம்
மா
பலா
முந்திரி
பனை
கேழ்வரகு
புளி
விளை பொருள்களும் கைத்தொழில்களும்

மிகுதியாகச் செய்யப்பட்டுவருகிறது. இந் நெல் வயல்களுக்குக் காவேரி நதியும், அதன் கிளை நதிகளுமான சுமார் இருபது சிற்றாறுகளின் வழியாக ஜலம் பாய்ச்சப் படுகிறது. முன்னமே கூறியவாறு இவைகளுக்குப் பலமாகக் கரைகள் அமைக்கப்பட்டு, நூற்றுக்கணக்கான வாய்க்கால்களும் இவைகளிலிருந்து வெட்டப் பட்டு, ஒவ்வொரு கிராமத்துக்கும் ஜலவசதி நன்றாகச் செய்யப்பட்டு வருகிறது.

சமீபத்தில் வெட்டப் பட்ட கல்லணைக் கால்வாயும் அதன் கிளைகளும், மன்னார்குடி, தஞ்சாவூர் தாலூகாக்களின் தென் பாகத்திற்கும், பட்டுக்கோட்டைத் தாலூகாவிற்கும் ஜலவசதியைச் செய்து வருகின்றன.

அதனால் ஏற்கனவே புன்செய் நிலமாக இருந்த அநேக பாகங்கள் நன்செய் நிலமாக மாற்றப்பட்டு நெல் சாகுபடிக்கு யோக்கியமாகச் செய்யப்பட்டிருக்கின்றன. இப்புதிய ஏற்பாட்டினால் சுமார் முந்நூறு ஆயிரம் ஏகரா நிலங்கள் நன்செயாகச் செய்யப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே காவிரி, கொள்ளிடம் முதலிய ஆறுகளினால் சாகுபடி செய்யப்பட்ட நிலங்கள் சுமார் தொளாயிரத் தைம்பதினாயிரம் ஏகரா நிலங்களாகும். ஆகையால் நமது ஜில்லாவின் முக்கால்பாக நிலங்கள் நெல் விளைவுக்கே உபயோகப்படுத்தப்படுகின்றன. விளை பொருள்களின் மொத்தத்தில் நூற்றில் எழுபத்தைந்து பங்கு நெல் சாகுபடியும், பத்துப்பங்கு துவரை, கம்பு, கேழ்வரகு முதலிய புன்செய்த் தானியங்களும், ஐந்து பங்கு மணிலாக்கொட்டையும், ஐந்து முதல் ஏழுபங்கு வரையில், கறிகாய், பழம், வெற்றிலை முதலியவைகளும், மூன்று பாகம் எண்ணெய் வித்துக்களும் சாகுபடி செய்யப்படுகின்றன. பழந்தரும் முக்கியமான மரங்கள், மா, பலா, புளி முதலியவைகளே. பட்டுக்கோட்டை. அறந்தாங்கி தாலூக்காக்களில் பனைமரம் அதிகம். அதை வீடு கட்டுவதற்கு உபயோகிக்கிறார்கள். மணற்பாங்கான உயர்ந்த இடங்களில் சவுக்கு மரங்களையும் பயிராக்குகிறார்கள். ஆற்றங்கரை ஓரங்களில் மூங்கில்களைக் கொண்டே பல வீடுகளின் கூரைகள் கட்டப்படுகின்றன.

இவைகளே யன்றி, கொல்லைகளிலும், ரஸ்தாக்களிலும், ஆற்றங்கரைகளிலும், வேம்பு, பூவரசு, நாவல், ஆல், இலுப்பை, அரசு முதலிய பல மரங்கள் அமைக்கப்பட்டு வளர்க்கப்படுகின்றன.

நமது ஜில்லாவில் காட்டு மிருகங்களில்லை யென்றே சொல்லலாம். வேதாரணியத்துக்குச் சமீபத்திலுள்ள காடுகளில் மான்கள் சஞ்சரிக்கின்றன. சில மட்டக் குதிரைகளும் உண்டு. சிலர் கோடைக் காலங்களில் ஆடு மாடுகளை இக்காடுகளில் மேய்வதற்கு விட்டுவிடுகிறார்கள். பெரும்பாலும் நன் செய் சாகுபடி செய்வதனால் ஆடு மாடுகள் மேய்வதற்குப் புல் வெளிகள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. ஆகையால் வேறு சில ஜில்லாக்களைப் போல இவ்விடத்தில் நல்ல மாடுகளே கிடைப்பதில்லை. சாகுபடிக்காகவும், வண்டி இழுப்பதற்காகவும் மாடுகள் இதர ஜில்லாக்களிலிருந்து தான் இறக்குமதி செய்யப்படுகின்றன.

வல்லத்துக்குச் சமீபத்திலுள்ள பிரதேசத்தில் வெட்டியெடுக்கப்படும் கப்பிக் கற்களைத் தவிர வேறு எவ்விதமான தாதுப் பொருள்களும் இந்த ஜில்லாவில் கிடையா. வல்

லத்திலிருந்து அகப்படுகிற சில கூழாங் கற்களிலிருந்து மூக்குக் கண்ணுடிகளைச் செதுக்கி யெடுக்கிருர்கள்! ஆனுல் தஞ்சாவூர் தாலுகாவின் மேட்டுப்பாங்கான மேற்குப் பாகங்களில் மண் கலந்த இரும்புச் சத்துக்கள் இருக்கின்றன. அவைகளை உருக்கி எடுப்பது வசதிக்குறைவினுல் தடைப்பட்டிருக்கிறது.

பயிற்சி

1. நமது ஜில்லாவில் முக்கியமாக என்ன தானியம் உற்பத்தியாகிறது? அதன் காரணமென்ன?
2. புன்செய்த் தானியங்கள் எங்கே உற்பத்தியாகின்றன?
3 நமது ஜில்லாவில் முக்கியமாக உற்பத்தியாகும் பழ வகைகள் யாவை?
4. வெற்றிலை எவ்விடத்தில் அதிகமாகப்பயிரிடப்படுகிறது?
5. அது வெளியூர்களுக்கு எவ்விடத்திலிருந்து முக்கியமாக ஏற்றுமதி செய்யப்படுகிறது?
6 நம் ஜில்லாவில் வீடு கட்டுவதற்கு உபயோகப்படக்கூடிய மரங்கள் எவையேனும் உண்டா?
7. காட்டு மிருகங்கள் இந்த ஜில்லாவில் எவையேனு மிருக்கின்றனவா?
8. வேதாரணியக் காடுகளில் சஞ்சரிக்கும் முக்கியமான மிருகங்கள் எவை?
9. பூமியிலிருந்து வெட்டி யெடுக்கப்படும் பொருள்கள் எவை?

ஒன்பதாம் பாடம்

கைத்தொழில்கள்

விளை பொருள்களிலிருந்து கைத்தொழில் மூலமாகச் சில பொருள்களை மனிதர்களுடைய சௌகரியத்தை உத்தேசித்துச் செய்து கொள்ளுவது எங்கும் வழக்கமாயிருக்கிறது. பருத்தி, பட்டிலிருந்து வஸ்திரங்களும், மரங்களிலிருந்து மேஜைகள். அலமாரிகள் முதலிய மரச் சாமான்களும், பிராணிகளின் உரோமங்களிலிருந்து கம்பளங்களும், தோல்களிலிருந்து பாதரட்சை, தோற்பைகள் முதலிய சாமான்களும்,உலோகங்களிலிருந்து பாத்திரம் முதலானவைகளும் செய்யப்படுகின்றன என்பதை நீங்கள் நன்கறிவீர்கள். மற்றும் சில சாமான்களிலிருந்து அலங்காரமாக உபயோகப்படுத்தக்கூடிய நகைகளும், சித்திர வேலைகளும், செய்யப்படுகின்றன. இவைகளுள் எந்தக் கைத்தொழில்கள் நமது ஜில்லாவில் நடைபெறுகின்றன என்பதைக் கவனிப்போம்.

நமது ஜில்லாவில் நெல் சாகுபடி அதிகமாயிருப்பதனுல் அயல் நாடுகளுக்கு நெல்லை அரைத்து அரிசியாக்கி மூட்டை மூட்டைகளாக ரயில் மார்க்கமாய் அனுப்புவது வழக்கமாயிருக்கிறது. சுமார் பத்துப் பதினைந்து வருஷங்களுக்கு முன்னுல் தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து அரிசி மூட்டைகள் கொழும்பு முதலான அயல் நாடுகளுக்கு அதிகமாக அனுப்பப்பட்டு வந்தன. இப்பொழுது இலங்கைத் தீவில் நெல் விளைவு ஏற்பட்டிருப்பதாலும் ஜாவா, பர்மா, முதலிய தேசங்களிலிருந்து, மிகுதியாக நெல்லும் அரிசியும் இறக்குமதி செய்யப்படுவதனுலும், அரிசி மூட்டைகள் நமதுஜில்லாவிலிருந்து ரயில் மார்க்கமாக அனுப்புவதில் மிகுந்த செலவு ஏற்படுவதினுலும் இந்த வியாபாரம் மிகவும் தடைப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக இந்த ஜில்லாவிலும் நெல் விலை குறைந்திருக்கிறது. நெல்லரைக்கும் யந்திரங்கள் திருவாரூர், பேரளம், குற்றுலம், நீடாமங்கலம், மன்னுர்

குடி முதலான இடங்களில் மிகுதியாக ஏற்படுத்தப் பட்டிருக்கின்றது.

நமதுஜில்லாவில் பருத்திநூலும், பட்டு நூலும் அயல்நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்டு ஏராளமாக நெசவுத்தறிகள் மூலமாக வஸ்திரங்களாகப்படுகின்றன. கும்பகோணம், குடவாசல், கூறைநாடு, அய்யம்பேட்டை, முதலிய இடங்களில் பட்டுச்சேலைகளும், பட்டும் நூலும் கலந்த சேலைகளும் நெய்யப்படுகின்றன. இவைகளில் ஜரிகைகளும் கலந்து நெய்கிறார்கள். இந்நெசவுத் தொழிலையே ஜாஸ்தியாகச் செய்து வருகிறவர்கள் பட்டு நூற்காரர்களென்று சொல்லப்படும் சௌராஷ்டிர ஜாதியார்களே இவர்கள் அதிகமாகக் கும்பகோணம், தாராசுரம், அய்யம்பேட்டை முதலிய ஊர்களில் குடியேறியிருக்கிறார்கள்.

பருத்தி நூல்களால் வஸ்திரங்கள் கும்பகோணம், மன்னார்குடி, துகிலி. திருநாகேச்வரம், சுந்தரப் பெருமாள் கோவில் முதலிய இடங்களில் நெய்யப்படுகின்றன. இத்தொழிலை நடத்தி வரும் ஜாதியார்கள் பெரும்பாலும் செங்குந்தர் என்று சொல்லப்படும் கைக்கோளர்களே. சேடர்களென்னும் ஒரு வகுப்பினர் மன்னார்குடியில் இத் தொழிலைச் செய்து வருகிறார்கள். துகிலியில் நெய்யப்படும் வஸ்திரங்கள் மெல்லியனவாகவும், வழ வழப்பாகவும் இருக்கின்றன.

கம்பளி நெசவானது தஞ்சாவூர், பட்டுக்கோட்டைத் தாலுகாவில் கந்தர்வ கோட்டை முதலான இடங்களில் நடை பெறுகிறது.

முன்னமே கூறியவாறு பித்தளை, வெண்கலம், ஈயம் முதலிய பாத்திரங்களும் கும்பகோணம், தாராசுரம், நாச்சியார்கோவில் முதலான இடங்களில் செய்யப்படுகின்றன. கும்பகோணம் ஈயப் பாத்திரத்துக்குப் பெயர் பெற்றது. இப்பாத்திரங்கள் இங்கிருந்து பலவிடங்களுக்கும் அனுப்பப் படுகின்றன. வெள்ளிப் பாத்திரங்களும் கும்பகோணத்தில் அதிகமாகச் செய்யப் படுகின்றன. இவைகளுடன் உயர்ந்த தங்க நகைகளும், கல் நகைகளும் இந்த ஜில்லாவில் கும்பகோணம், நாகூர், காரைக்கால் முதலிய விடங்களில் செய்யப்படுகின்றன.

கும்பகோணத்திலிருந்து கிழக்கே பத்துமைல் தூரத்திலுள்ள ஆடுதுறை என்னுமிடத்தில் தோல் பதனிடுகிறார்கள்.

நெட்டி வேலைகளும், வர்ணப் படங்களும் தஞ்சையில் செய்யப்படுகின்றன என்று முன்னமே குறிப்பிட்டிருக்கிறோம். மேலும் வீணை வாத்தியம் செய்வதற்கு வெகுகாலமாகத் தஞ்சாவூர் பெயர் வாய்ந்ததாக இருக்கிறது.

பிரம்பினால் பின்னப்படும் சாமான்கள் கொள்ளிடக் கரையிலுள்ள ஆனைக்காரன் சத்திரத்திலும், திருத்துறைப்பூண்டித் தாலுகாவில் சில இடங்களிலும் செய்யப்படுகின்றன. கழிக்கோரையினால் நெய்யப்படும் பாய்கள் சீர்காழியிலும், அய்யம்பேட்டையிலும் அதிகம்.

பயிற்சி

1 நமது ஜில்லாவில் நெல்லை அரைத்து அரிசியாக்கி வியாபாரம் செய்யும் இடங்களெவை?

2 நமது வியாபாரம் தற்காலத்தில் எந்த நிலையில் இருக்கிறது? என்?

3 பருத்தி, பட்டு வஸ்திரகள், நெய்யுமிடங்கள் யாவை?

4 உரோமங்களிலிருந்து கம்பளக்கள் எவ்விடத்திலேனும் செய்யப்படுகின்றனவா?

5 தோல் எவ்விடத்தில் பதனிடப்படுகிறது?

6 பித்தளைப் பாத்திரங்களும், வெள்ளிப் பாத்திரங்களும் செய்யும் இடங்கள் யாவை?

7 இவைகளைத் தவிர மற்ற முக்கியமான கைத்தொழில்கள் எவை?

பத்தாம் பாடம்

ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படும் இடங்கள்

பண்டைக்காலத்தில் சோழநாட்டிலிருந்து அநேக உள் நாடுகளுக்கும் சமுத்திரத்திற் கப்பால் அயல் நாடுகளுக்கும், வியாபாரப் போக்குவரத்து அதிகமாக இருந்ததாகக் கேள்விப் படுகிறோம். இப்பொழுது சமுத்திரக்கரையில் இடிந்து விழுந்துகிடக்கும் தீபஸ்தம்பங்களினாலும், கட்டடங்களினாலும் எந்தெந்த இடங்களில் அயல் நாட்டு வியாபாரங்கள் நடந்திருக்க வேண்டுமென்றும் அறிகிறோம்.

அயல் நாட்டு வியாபாரங்கள் நடைபெற்ற இடங்களாவன:—

திருமுல்லைவாசல், காவிரிப்பூம்பட்டினம், தரங்கம்பாடி, நாகப்பட்டணம், கோடிக்கரை, அதிவீரராமன் பட்டணம் முதலியவைகளாம்.

இப்பொழுது நாகப்பட்டணம், காரைக்கால் என்ற இரண்டு துறைமுகங்களிலேயே அயல் நாட்டிலிருந்து கப்பல்கள் மூலமாகச் சாமான்கள் ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்படுகின்றன. திருமுல்லைவாசல், தரங்கம்பாடி, கோடிக்கரை முதலிய இடங்களில் பாய்மரப்படகுகளில் சில சாமான்கள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படுகின்றன. நாகப்பட்டணத்திலிருந்து தெற்கே வேதாரணியம் வரையில் சமுத்திரக்கரை ஓரமாக ஒருகால்வாய் செல்லுகிறது. அதன் வழியாக உப்பு மூட்டைகள் முதலான சில சாமான்கள் படகுகளிலேற்றி அனுப்பப்படுகின்றன.

இந்த ஜில்லாவின் உள் பாகத்தில் அநேக ரஸ்தாக்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவைகளின் வழியாகவும் இருப்புப்பாதைகளின் வழியாகவும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் போக்கு வரத்தும், வியாபாரமும் நன்றாக நடைபெறுகின்றன.

இந்த ஜில்லாவின் வடக்கெல்லையான கொள்ளிடத்தைத் தாண்டிச் செல்வதற்கு இருப்புப் பாதையைத் தவிர ரோடு மார்க்கமாக அணைக்கரையில் ஒரு பாலமும் கட்டப்பட்டிருக்கிறது. அறந்தாங்கியில் முடியும் இருப்புப் பாதையைத் தெற்கே காரைக்குடி வரையில் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டால், இந்த ஜில்லாவுக்கும், இராமநாதபுரம் ஜில்லாவுக்கும் போக்கு வரத்து வசதி சுலபமாகவும், நேர்த்தியாகவும் ஏற்பட்டு விடும். ரயில் பாதை வேதாரணியத்துக்கப்பாலுள்ள கோடிக்கரை வரையில் கொண்டு போகப்பட்டிருக்கிறபடியால், அங்கிருந்து சிறு புகைக் கப்பல்கள் மூலமாக யாழ்ப்பாணத்திற்கு வியாபாரமும், ஜனப் போக்கு வரத்தும் செய்து கொண்டால் தஞ்சாவூர் ஜில்லாவின் வியாபாரம் விருத்தியாவதற்கு அது ஒரு முக்கிய சாதனமாகும்.

பயிற்சி

1. ஏற்றுமதி, இறக்குமதி என்றாலென்ன?
2. அதன் அவசியம் என்ன?

3. இந்த ஜில்லாவில் சாமான்களின் போக்கு வரவிற்கு என்னென்ன வசதிகளிருக்கின்றன?

4. கொள்ளிடத்தைத் தாண்டி அக்கரை செல்லுவதற்கு எவ்விடங்களில் பாலங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன?

5. ஜில்லாப் படத்தில் இருப்புப் பாதைகளை வரைந்து காட்டவும்.

பதினேன்றும் பாடம்

ஜனத் தொகை

தென்னிந்தியாவிலுள்ள பிரதேசங்களுள் தஞ்சாவூர் ஜில்லா ஜன நெருக்கமுள்ளது. இதன் மொத்த ஜனத்தொகை 2385920 ஆகும். பெரும்பாலும் ஜனங்கள் கிராமங்களிலேயே வசித்து வருகிறார்கள். பட்டணங்களென்று சொல்லக் கூடிய இடங்கள் குறைவுதான். தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், திருவாரூர், நாகப்பட்டணம், மன்னார்குடி, என்னும் ஆறுபட்டணங்களும் ஜனத் தொகையில் உயர்ந்தவை. இவ்விடங்களில் நகர பரிபாலனத்திற்காக முனிசிபாலிடிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவைகளுள் தஞ்சாவூர், கும்பகோணம் இவ்விரண்டும் ஜனத்தொகையில் மிக்கவைகளாம். மன்னார் குடியும், திருவாரூரும் மிகவும் குறைந்தவைகளாம். இவைகளைத் தவிர திருவிடைமருதூர், சீர்காழி, வேதாரணியம் முதலியவைகளைச் சிறு பட்டணம் என்றே சொல்லலாம். இவைகளுள் வேதாரணியம் ஜனத் தொகையில் அதிகமானது.

ஜனங்களில் பெரும்பாலோர் இந்துக்களாகவும், அதற்கடுத்த ஜன சங்கியை உள்ளவர்கள் மகமதியர்களாகவும் இருக்கிறார்கள். கிறிஸ்தவர்களை மூன்றாவதாகக் கருதலாம். நூற்றுக்குத் தொண்ணூறு பேர் இந்துக்களும், ஆறுபேர் மகமதியர்களும், மற்றவர்கள் இதர மதத்தினர்களாகவும் இருக்கிறார்கள். தஞ்சாவூரில்மகாராஷ்டிர அரசர் ஆதிக்கம் பெற்ற பிறகு மகாராஷ்டிர ஜாதியினர் அதிகமாகத் தஞ்சாவூர்ப் பட்டணத்திலும், கும்பகோணம், மன்னார்குடி முதலிய இடங்களிலும் வசித்து வருகிறார்கள்.

மகமதியர்கள் நாகூர், நாகப்பட்டணம், கூத்தானல்லூர், அய்யம் பேட்டை, நீடூர் முதலான இடங்களில் அதிகமாக வசிக்கின்றனர்.

கிறிஸ்தவர்கள் தஞ்சாவூர், நாகூர், நாகப்பட்டணம், தரங்கம்பாடி, வேளாங்கண்ணி, மன்னார்குடி முதலிய இடங்களில் அதிகமாக வசிக்கிறார்கள்.

தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள தாலூகாக்களுள், ஜனநெருக்க முள்ளவை கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டணம் என்பவைகளாம். ஜனம் மிகக் குறைவானவை பட்டுக்கோட்டை, அறந் தாங்கி, திருத்துறைப் பூண்டி என்பனவாம்.

பயிற்சி

1. இந்த ஜில்லாவின் மொத்த ஜனத்தொகை என்ன?

2 ஜன நெருக்கமான தாலூகாக்கள் யாவை?

3. ஜனம் மிகக் குறைவான தாலூகாக்கள் யாவை?

4. இந்த ஜில்லாவின் பட்டணங்களுக்குள்மிகவும் ஜாஸ்தியான ஜனத்தொகை உள்ள பட்டணம் எது?

5. அதற் கடுத்தபடியாகச் சொல்லக்கூடிய பட்டணங்கள், யாவை?

பன்னிரண்டாம் பாடம்

தஞ்சை ஜில்லாவிலுள்ள தாலுகாக்கள்

அரசாங்க வசதிக்காக நமது ஜில்லாவானது பல சிறு பாகங்களாகப் பிரிக்கப்பட்டிக்கிறது. 1911ம் வருஷத்துக்கு முன்னுல் ஒன்பது பிரிவுகளிருந்தன. ஒவ்வொன்றிற்கும் தாலுகா என்று பெயர்.

அவைகளாவன:—தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், சீர்காழி, நன்னிலம், நாகப்பட்டணம், மன்னுர்குடி திருத்துறைப்பூண்டி, பட்டுக் கோட்டை என்பனவாம். சிலதாலுகாக்கள் மிகப் பெரியனவாயிருந்தமையாலும், அவைகளின் அரசாங்க சம்பந்தமான காரியங்களை ஒரு தாலுகா அதிகாரியே பார்ப்பது சிரமமாயிருந்தமையாலும், பட்டுக் கோட்டை, கும்பகோணம் என்னும் இவ்விரண்டு தாலுகாக்களும் இரண்டாகப் பிரிக்கப்பட்டன. அதனுல் 1911ம் வருஷம் முதல் பாபநாசம், அறந்தாங்கி என்ற இரண்டு தாலுகாக்கள் அதிகமாகச் சேர்க்கப்பட்டன. இவைகளுள் சில தாலுகாக்களை ஒன்ருகச் சேர்த்து ஒரு ரெவினியூ டிவிஷனுகப் பிரித்திருக்கிருர்கள். ரெவினியூ டிவிஷன்களாவன:—(1) தஞ்சாவூர் தாலுகா (2) கும்பகோணம் பாபநாசம் தாலுகாக்கள், (3) மாயவரம், சீர்காழித் தாலுகாக்கள் (4) நாகப்பட்டணம் நன்னிலம் தாலுகாக்கள், (5) மன்னுர்குடி திருத்துறைப்பூண்டி தாலுகாக்கள், (6) பட்டுக்கோட்டை அறந்தாங்கித் தாலுகாக்கள் என்பனவாம். இவ்வாறு ஏற்பட்ட ஒவ்வொரு பிரிவிற்கும் தலைவராக ஒவ்வொரு ரெவினியூ டிவிஷனல் ஆபீஸரை நியமித்திருக்கிருர்கள். ஒவ்வொரு தாலுகாவின் அதிகாரிக்கும் தாசில்தார் என்று பெயர்.

தஞ்சாவூர் ஜில்லாவின் நியாயஸ்தலங்களில் வேலை அதிகமாயிருந்ததனுல், ஒரு ஜில்லா நியாயாதிபதியினுல் சமாளிக்க முடியாதென்று, நியாய விசாரணைக்காகத் தஞ்சாவூர் ஜில்லாவை இரண்டாகப் பிரித்திருக்கிருர்கள். இவைகளுக்கு மேலத் தஞ்சாவூர், கீழத் தஞ்சாவூர் என்று பெயர். மேலத் தஞ்சாவூர் ஜில்லா நியாயாதிபதியின் நியாய ஸ்தலம் தஞ்சாவூரில் அமைக்கப் பட்டிருக்கிறது. இவருடைய அதிகாரத்தின் கீழ் தஞ்சாவூர், பட்டுக் கோட்டை, அறந்தாங்கி, மன்னுர்குடி, கும்பகோணம், பாபநாசம் என்னும் தாலுகாக்களிருக்கின்றன. கீழத் தஞ்சை ஜில்லாவின் நீதி ஸ்தலமானது நாகப்பட்டணத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. இவரது அதிகாரத்துக்கு உட்பட்டவை மற்ற ஐந்து தாலுகாக்களாகும்.

இவ்வாறே ஸ்தல ஸ்தாபனத்தையும் இரண்டாகப் பிரித்து இரண்டு ஜில்லா போர்டுகளாக 1934-ம் வருஷம் டிசம்பர் மாதம் முதல் ஏற்படுத்தியிருக்கிருர்கள்.

I. தஞ்சாவூர் தாலுகா

இது இந்த ஜில்லாவின் மேற்குக் கோடியில் இருக்கிறது. தஞ்சாவூரானது ஜில்லாவின் தலை நகரமென்று முன்னமே குறிப்பிட்டிருக்கிருேம். இவ்வூரின் ஜனத்தொகை 66989 ஆகும். இதர தாலுகாக்களைக் காட்டிலும் இது மேடானது.

தஞ்சாவூர் ஜில்லா
தென் ஆற்காடு ஜில்லா
திருச்சிராப்பள்ளி ஜில்லா
கொள்ளிடம்
சீர்காழி தாலூகா
மாயவரம் தாலூகா
கும்பகோணம் தாலூகா
நன்னிலம் தாலூகா
பாபநாசம் தாலூகா
தஞ்சாவூர் தாலூகா
நாகப்பட்டணம் தாலூகா
மன்னார்குடி தாலூகா
திருத்துறைப்பூண்டி தாலூகா
பட்டுக்கோட்டை தாலூகா
புதுக்கோட்டை ஸமஸ்தானம்
அறந்தாங்கி தாலூகா
பாக்ஸ் ஜலசந்தி
இராமநாதபுரம் ஜில்லா
தாலூகா எல்லைகள்
முக்கிய ஊர்கள்

இத்தாலூகாவின் முக்கியமான ஊர்கள்:—

i. திருவையாறு. இதன் ஜனத் தொகை 7741. இது தஞ்சாவூருக்கு வடக்கே சுமார் ஏழுமைல் தூரத்தி லுள்ளது. இதற்குப் பஞ்சநதக்ஷேத் திரமென்று வேறு பெயரும் உண்டு. ஏனென்றால், தஞ்சாவூரி லிருந்து இவ்வூர் வரையில் இடையே ஐந்து முக்கிய நதிகள் ஓடுவதனாலேயாம். இதில் சிறந்த மிகப் புராதனமான சிவாலயம் ஒன்றுண்டு. இங்கே தஞ் சாவூர் சமஸ்தானாதிபதியான மகா ராஷ்டிர அரசர்களின் தர்மஸ்தாபன மாகச் சம்ஸ்கிருத உயர்தரக்கல்லூரி (College) ஒன்றும், சத்திரமும் நடை பெறுகின்றன. இதற்கெனச் சிறந்த ஒரு கட்டிடமும் காவிரிக் கரை யோரத்தில் வெகு அழகாக அமைக் கப்பட் டிருக்கிறது. அதற்குக் "கலி யாண மகால்" என்று பெயர். இது வன்றி ஆங்கிலக் கலாசாலை ஒன்றும் இவ்வூரில் உண்டு.

இவ்வூரில் நடக்கும் சப்தஸ்தானம் என்னும் சிறந்த உற்சவமானது வெகு காலமாக நடைபெற்று வருகி றது. அவ்வமயம் உயர்ந்த சிவிகை யில் (பல்லக்கில்) கடவுளை எழுந்தரு ளச் செய்து, திருப்பழனம் முதல் திருநெய்த்தானம் ஈறுகவுள்ள ஏழு ஸ்தலங்களைச் சுற்றி வருகிறார்கள். அது காலையில் ஆஸ்திகபுத்தியுள்ள ஜனங்கள் கடவுளுடன் ஏழு ஸ்தலங் களையும் வலம் வருவார்கள். இதற்கு மௌனப் பிரதட்சணம் என்றும் பெயருண்டு.

சங்கீத உலகில் மிகவும் கீர்த்தி வாய்ந்த தியாகராஜ ஸ்வாமிகள் என்னும் கீர்த்தனாசாரியர் இவ்வூரி லேயே வசித்து நூற்றுக்கணக்கான கிருதிகளைச் செய்துள்ளார். இவரு டைய கானம் மிகவும் புகழப் பெற் றுத்தென்னாடு முழுவதும் பரவியிருக் கிறது. இப்பெரியாரது யோகமகி மையின் அறிகுறியாக இவருக்குத் தியாகப் பிரம்மம் என்னும் பெயர் வழங்குகிறது.

ii. வல்லம். இது தஞ்சாவூருக் குத் தென்மேற்கில் ஆறுமைல் தூரத்தி லிருக்கிறது. இங்குதான் தஞ்சை ஜில்லா கலெக்டர் வசித்து வருகிறார். இது வசிப்பதற்கு ஆரோக்கியமான இடமாகும். அது செம்மண் பாங்கான பிரதேசமாத லால் இங்கே துவரை விசேஷமா கப் பயிராகிறது.

iii. திருக்காட்டுப் பள்ளி. இது பூதலூர் ஸ்டேஷனுக்கு வடக்கே ஆறுமைல் தூரத்தில் இருக்கிறது. இங்கே ஸர். பி. எஸ். சிவஸ்வாமி ஐயர் அவர்களால் ஒரு ஹைஸ் கூலும், அதைச்சேர்ந்த மாணவர் நிலயமும், ஹரிஜனப் பிள்ளைகளுக் காக ஒரு பள்ளிக்கூடமும் நடத்தப் பட்டு வருகின்றன. அவர்கள் பிறந்த ஊர் இதற்கு மேற்கே ஒருமைலுக்கு அப்பாலுள்ள பழமார்நேரி என்ற கிராமமேயாகும்.

பாபநாசம் தாலூகா

இது மிகவும் செழிப்பான தாலூ காவாகும். இதன் தலைநகரம் பாப நாசம் என்பதாம். இது குடமுருட்டி ஆற்றின் தென்பாகத்தில் அமைந்தி ருக்கிறது. இதில் கச்சேரிகளும், ஹைஸ்கூலு மிருக்கின்றன. இத் தாலூகாவின் முக்கியமான விளை பொருள்கள், நெல், தேங்காய், வெற்றிலை, கிழங்குகள், முதலியவைக ளாம்.

இத்தாலூகாவின் முக்கியமான ஊர்கள்

i அய்யம்பேட்டை. இதன் ஜனத்தொகை 10163 ஆகும். பாபனுசத்துக்கு மேற்கே சுமார் ஆறுமைல் தூரத்திலுள்ளது. மகமதியர்களும், சௌராஷ்டிரர்களும் இங்கு அதிகமாய் வசிக்கிறுர்கள். ஆகையால் இங்கே வெற்றிலைக் கொடிக்கால்களும், பட்டு நூல் நெசவும், கோரைப்பாய்த் தறிகளும் அதிகம். இங்கு ஒரு ஹைஸ்கூலு மிருக்கிறது.

ii வலங்கைமான். இது பாபநாசத்துக்குக் கிழக்கே பத்துமைலுக்கு அப்பாலுள்ளது. இவ்விடத்தில் சேலைகள் நெய்யப்படுகின்றன.

iii ராஜகிரி. இது பாபநாசத்திற்கு மேற்கே இரண்டு மைல் தூரத்திலிருக்கிறது. இதில் மகமதியர்கள் அதிகமாக வசிக்கிறுர்கள். காலஞ்சென்ற ஆர். இ. மகமத்காசிம் என்பவரின் புதல்வரான ஷேக் டாவுத் என்பவரால் ஒரு இலவசப் பள்ளிக்கூடமும், வைத்தியசாலையும் இங்கேநடத்தப் படுகின்றன. இத்தாலூகாவின் மற்றவூர்கள்-பண்டாரவாடை, அம்மாபேட்டை, மாரியம்மன்கோவில், மெலட்டூர் முதலியனவாம்.

கும்பகோணம் தாலூகா

இதுவும்பாபநாசம் தாலூகாவைப் போல் செழிப்பானதே. கும்பகோண நகரைப்பற்றி முன்னமே விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. இதன் ஜனத்தொகை 62317. இத்தாலூகாவின் முக்கியமான ஊர்கள்—திருநாகேச்வரம், திருவிடைமருதூர், ஆடுதுறை முதலியனவாம். இவைகளைப் பற்றியும் முன்பே கூறப்பட்டிருக்கிறது.

i ஸ்வாமிமலை. இது கும்பகோணத்திற்கு மேற்கே சுமார் நான்குமைல் தூரத்திலுள்ளது. இதற்குத் திருவேரகம் என்ற மற்ருெரு பெயருமுண்டு. இது முருகனது ஆறுபடை வீடுகளுள் ஒன்று.

ii நாச்சியார்கோவில். இது கும்பகோணத்திற்கு அப்பால் தென்கிழக்கே சுமார் ஆறுமைல் தூரத்திலுள்ளது. இதில் வெண்கலப் பாத்திரங்கள் செய்கிறுர்கள். இங்கே சிறந்த விஷ்ணு ஆலயம் ஒன்றிருக்கிறது.

மாயவரம் தாலூகா

இத்தாலூகாவும் மிகவும் செழிப்புள்ளதே. இதன் தலை நகரம் மாயவரம், இதன் ஜனத்தொகை 31887 ஆகும். இதிலுள்ள நகரபரிபாலன சபையாரால் ஒரு ஹைஸ்கூல் நடத்தப்படுகிறது. இதன் வழியாகச் செல்லும் காவிரிநதியின் பெருமையும், இருப்புப்பாதைகளும் முன்னரே கூறப்பட்டிருக்கின்றன.

இதன் முக்கியமான ஊர்கள்—குற்ருலம், தரங்கம்பாடி, திருக்கடையூர் என்பனவாம்.

தேரழுந்தூர் இது கவிச்சக்கிரவர்த்தியாகிய கம்பர் தோன்றிய இடமாகும். அதன் அறிகுறியாகக் கம்பர் மேடு என்ற ஓரிடமும் இவ்வூரில் இருப்பதைப் பார்க்கலாம். இங்குக் கோவில் கொண்டிருக்கும் கடவுளுக்கு ஆமருவியப்பன் என்று பெயர். இது ஒரு விஷ்ணு ஸ்தலமாகும்.

சீர்காழித் தாலூகா

இது நமது ஜில்லாவின் வடகிழக்கே அதன் எல்லையான கொள்ளிடக்கரை வரையில் பரவி யிருக்கி

றது. இது விஸ்தீர்ணத்தில் மிகவும் சிறியது. இதன் கிழக்குக்கரை கடலோரமாக இருக்கிறது. இதன் தலைநகரம் சீர்காழி.

சீர்காழியில் திருஞான சம்பந்தர் பிறந்து வளர்ந்தாரெனக் கூறப்படுகிறது. இவ் வூரிலுள்ள சிவன் கோவிலில் வருஷந்தோறும் சித்திரை மாதத்தில் திருமுலைப்பால் என்னும் திருவிழா சிறப்பாக நடக்கிறது. ஞானசம்பந்தருக்கு அம்பிகை பால் கொடுத்து மகிழ்வித்தாரென்னும் கதையை இவ்வுற்சவ மூலமாகக் கொண்டாடுகிறார்கள். இங்கே இரண்டு உயர்தரக் கலாசாலைகளிருக்கின்றன. இத்தாலூகா, ஏற்றுமதி இறக்குமதி வசதிக்காகச் சில துறைமுகங்களும், பிரம்பு பின்னுதல், பாய் நெய்தல் முதலிய குடிசைத் தொழிலிற் சிறந்த ஆனைக்காரன் சத்திரம் முதலிய இடங்களும் உடையதாகும். வைத்தீஸ்வரன் கோவில் என்னும் முக்கிய சிவஸ்தலம் இத்தாலுகாவில் இருக்கிறது. இத்தாலூகாவிலுள்ள காவிரிப்பூம்பட்டினத்தைப் பற்றி ஏற்கனவே கூறியிருக்கிறோம். இராம நாடகத்தை இயற்றிய அருணாசலக்கவிராயர் சீர்காழியிற் பிறந்தவரே ஆவர்.

நன்னிலம் தாலூகா

இது முக்கியமாக நெல் விளைவுக்குப் பெயர்பெற்றது. சர்க்கார் கிஸ்தியின் தொகை மற்ற தாலூகாக்களைக் காட்டிலும் மிகவும் அதிகம். காவேரி நதியின் பல கிளைகளும், வாய்க்கால்களும் இத்தாலூகா வழியாகப் பாய்ந்தோடி இதை மிகவும் செழிக்கச் செய்திருக்கின்றன.

இதன் தலை நகரம் நன்னிலம். இதில் வெகு காலத்துக்குமுன் கோச்செங்கட் சோழனால் கட்டப்பட்ட சிவாலய மொன்றிருக்கிறது. இக்கோவிலில் தேன் பூச்சிகள் மிகவும் அதிகமாய் வசித்து வந்ததனால் இதற்கு மதுவனம் என்ற பெயர் வந்ததென்பார். இவ் வூரில் ஒரு போர்டு ஹைஸ்கூல் இருக்கிறது. அதை யொட்டிய மாணவர் நிலயமும் ஒன்றுண்டு. இங்குப் பல கச்சேரிகளும், கவர்ண்மெண்டு மராமத்து இலாகாவின் கிளை ஆபீஸும், மிருக வைத்தியசாலையும் இருக்கின்றன. இவ்வூருக்குச் சமீபத்திலுள்ள மாப்பிள்ளைக்குப்பம் என்னுமிடம் நெசவுத்தொழிலுக்குப் பெயர் பெற்றது.

இத்தாலூகாவின் முக்கியமான ஊர்கள் :—

குடவாசல். இது நன்னிலத்திற்கு மேற்கே சுமார் பதினொரு மைலுக் கப்பாலிருக்கிறது. இதில் பட்டு நெசவுத்தொழில் நடைபெறுகிறது. இது கும்பகோணத்திலிருந்து சுமார் பன்னிரண்டு மைல் தூரத்தில் தென் மேற்கிலுள்ளது. இங்கு ஒரு ஹைஸ்கூல் உண்டு.

ii பேரளம். இவ்விடத்திலிருந்து தான் காரைக்காலுக்குப் போகும் இருப்புப்பாதை பிரிகிறது. காரைக்காலிலிருந்து வரும் பிரயாணிகளைப் பரிசோதிக்கவும், புதுச் சாமான்களுக்கு வரி வசூலிக்கவும், கஸ்டம் அதிகாரிகள் இங்கே இருக்கிறார்கள்.

திருக்கண்ணபுரம், திருச்செங்காட்டான்குடி, முடிகொண்டான், ஸ்ரீவாஞ்சியம், என்பன இத்தாலூகாவின் பிறவூர்களாம்.

நாகப்பட்டணம் தாலூகா; இத்தாலூகாவில் சில பாகங்கள் உவர்

மண் கலந்தவை. இதன் தலைநகரம் நாகப்பட்டணம். இதன் ஜனத் தொகை 48527 ஆகும். இது ஒரு முக்கியமான துறைமுகப்பட்டணம். நமது ஜில்லாவிலிருந்து அயல் நாடுகளுக்குப் போக்கு வரத்து செய்வதென்ருல், இத்துறைமுகத்தின் வழியாகத்தான் செல்லவேண்டும். இதில் ஒரு முனிசிபாலிட்டியும், இரண்டு ஹைஸ்கூல்களும், ஜில்லாக் கோர்ட்டும், கிழத்தஞ்சை ஜில்லா போர்டாபீஸும், கஸ்டம் ஆபீஸும் இருக்கின்றன.

தென்னிந்திய இருப்புப் பாதையின் சிறந்தொரு தொழிற்சாலை இங்கிருந்து திருச்சிராப்பள்ளிக்குக் கொண்டு போகப்பட்டிருக்கிறது. அக் கட்டிடத்தில்தான் தற்போது இரும்புருக்கும் யந்திரச்சாலையொன்று புதிதாக அமைக்கப்பட்டிருக்கிறது. வெகுகாலமாக இவ்வூர் இரும்பு வேலைக்குப் பெயர் பெற்றதால் இரும்புச் சாமான்களும், இரும்புப் பெட்டிகளும் இங்கே அதிகமாய் வியாபாரம் செய்யப்படுகின்றன.

இத்தாலூகாவின் முக்கியமான ஊர்கள் :—

i **நாகூர்.** இது நாகப்பட்டணத்துக்கு வடக்கே மூன்றுமைல் தூரத்திலுள்ளது. இங்கே இஸ்லாமியர்கள் அதிகம். இங்கே பிரசித்தி பெற்ற பள்ளிவாசல் ஒன்றிருக்கிறது. இதனைத் தர்கா என்று சொல்லுகிருர்கள். இதில் மகமது மீரான் என்ற ஒரு பெரியார் அடக்கம் செய்யப்பட்டிருப்பதால் இக் கல்லறையைக் காணப் பல இந்துக்களும், மகமதியர்களும் பிரார்த்தனை செய்து கொண்டு வருகிருர்கள். வருஷந்தோறும் நடக்கும் கந்தூரி உற்சவத்திற்குத் திரள் திரளாக ஜனங்கள் வருகிருர்கள்.

ii **வேளாங்கண்ணி:** இது நாகப்பட்டணத்திற்குத் தெற்கே கடற்கரையில் உள்ளது. இது கிறிஸ்தவர்களின் முக்கிய வாசஸ்தலம். இங்கு நடக்கும் வருஷாந்தர "ஆரோக்கிய மாதா" உற்சவத்திற்குப் பல விடங்களிலிருந்து ஜனங்கள் வருகிருர்கள்.

iii திருவாரூர். இதன் ஜனத் தொகை 20371 ஆகும். இங்கே நான்கு இருப்புப்பாதைகள் சந்திக்கின்றன. இதன் வழியாக வெட்டாற்றின் கிளை நதியானஒடம்போக்கியாறென்னும் ஒரு சிற்ருறு ஒடுகிறது. இதில் ஒரு முனிசிபாலிட்டியும், ஹைஸ்கூலும், இருக்கின்றன. இங்குள்ள சிவாலயத்திலிருக்கும் ஸ்வாமிக்குத் தியாகராஜா என்று பெயர். இது ஆதி காலத்தில் சிறந்த விஷ்ணு வாலயமாக இருந்து பிறகு சிவாலயமாக மாற்றப்பட்டு உள்ளது.

பழைய காலத்தில் அரசுபுரிந்த சோழமன்னர்களில் ஒருவரான மனுநீதிச் சோழர் இவ்வூரையே தலைநகராகக்கொண்டு அரசுபுரிந்ததாகத் தெரியவருகிறது. அவர் மனுநெறி தவருது அரசு புரிந்தமையின் அவருக்கு அப்பெயர்வந்தது. அவர்தன் அரண்மனை வாயிலில் கட்டிவைத்திருந்த ஆராய்ச்சிமணியி ஞெலியால் தன்மகன் ஒரு பசுங்கன்றைக் கொன்ருனென்பதை யறிந்து தன் மகனென்றும் பாராது நீதிவழங்கிய கதையைச் சரித்திரங்களில் படித்துத் தெரிந்துகொள்ளலாம். இக்கோவில் மகாரதம் மிகவும் அழகுவாய்ந்தது. சில வருஷங்களுக்கு முன் அது

தீவாய்ப்பட்ட படியால் அதைத் திரும்பவும் புதிதாக அமைத்திருக் கிருர்கள். இவ்வூரில் தான் சென்ற நூற்ருண்டில் சங்கீத உலகில் பெரும் புகழ்பெற்ற கவிச் சிரேஷ்டரும், வைணிகருமான ஸ்ரீ முத்து ஸ்வாமி தீட்சிதர் பிறந்தார். அவர் இவ்விட த்திலேயே வசித்து நூற்றுக் கணக் கான கிருதிகளைச் செய்து வந்தனர் என்பர். அவரது கிருதிகள் இப்பொ ழுதும் வித்வான்களால் தென் னிந்தியா முழுவதும் பாடப்படுகின் றன. திருவையாற்றில் வசித்துவந்த ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளும், காலஞ் சென்ற புகழ்பெற்ற ஹைகோர்ட் ஜட்ஜ் ஸர், டி. முத்துஸ்வாமி அய் யர் அவர்களும் இவ்வூரைச் சேர்ந்த வர்களேயாவர்.

மன்னர்குடித் தாலுகா

இத்தாலுகாவும் மேட்டுப் பாங் கான தாலுகாக்களில் ஒன்று. இதற்கருகில் கடற்கரையே கிடை யாது. வெண்ணுறும், அதன் கிளை நதிகளுமான பாமணியாறு, கோ ரை யாறுகளினல் பெரும்பாலும் பாசனநதிகள் ஏற்பட்டிருக்கின்றன. வட வாற்றுக் கால்வாய்ப் பாசனத் தினல், இத் தாலுகாவில் சில புதிய கிராமங்களுக்கு நீர் வசதி ஏற்பட்டிருக்கிறது. இது நமது ஜில்லாவில் நடுவில் அமைந் திருக்கிறது. தென் மேற்குப்பாகம் செவ்வல் நிறமுள்ளது. மா, பலா முதலிய கனிதரு விருட்சங்களும், ரோஜா முதலிய புஷ்பச்செடிகளும், சுவை மிகுந்த காய்கறிளும், இத் தாலுகாவில் உற்பத்தியாகின்றன.

இத்தாலுகாவின் தலை நகரம் மன் னர்குடி. இதன் ஜனத்தொகை 22764 ஆகும் இவ்வூரின் வழியாகப் பாம ணியாறு ஓடுகிறது. இங்குப் பிரா டஸ்டெண்டு கிறிஸ்தவர்கள் அதிக மாக வசித்து வருகிருர்கள். மிஷன் ஹைஸ்கூலும், மற்ருெரு ஹைஸ் கூலுமிருக்கின்றன. இது ஒரு சிற ந்த விஷ்ணு ஸ்தலம். விஷ்ணுகோ விலானது குலோத்துங்க சோழ ரால் கட்டபட்டதாகத் தெரியவரு கிறது. கோவிலுக்கு வடக்கே இர ண்டு பர்லாங்குகளுக் கப்பால் பெரிய தெப்பக்குளம் ஒன்றிருக்கிறது. அத ற்கு ஹரித்ராநதி என்று பெயர்.

இவ்வூரில் பித்தளைப் பாத்திரங்கள் செய்யப் படுகின்றன. சேணியர், சேடர் முதலிய ஜாதியார்கள் அதிக மாக வசிக்கிருர்கள். ஆகையால் நெசவுத்தொழில் அதிகமாக நடை பெற்று வருகிறது. இவ்வூரில் ஒரு ஜைனர் கோவிலும் உண்டு.

இத்தாலுகாவிலுள்ள முக்கியமான ஊர்கள்:—

I. நீடாமங்கலம். இது மன்னர் குடிக்கு வடக்கே சுமார் எட்டு மைல் தூரத்தில் இருக்கிறது. நாகூரி லிருந்து தஞ்சாவூர் செல்லும் இருப் புப்பாதையிலிருந்து மன்னர்குடிக்கு இவ்விடத்தில் ஒரு கிளைப்பாதை ஏற் பட்டிருக்கிறது. இவ்விடத்தில் அரிசியந்திரசாலை ஒன்றிருக்கிறது. வெண்ணுற்றிலிருந்து பாமணியா றும், கோரையாறும் இவ்விடத்தில் தான் பிரிகின்றன.

ii மகாதேவப்பட்டணம். இப் பெயர்கொண்ட கிராமம் இதற்குத் தென்மேற்கே பத்துமைல் தூரத் தில் இருக்கிறது. இங்கே ஒருகாலத் தில் ஹைதர் ஆலிக்கும், ஆங்கிலேய

ருக்கும் போர் நடந்ததாகச் சொல்லு கிறார்கள். இங்கே ஒரு கோட்டையும்; அதற்குள் ஒரு கோவிலும் இருக் கின்றன.

iii கூத்தாநல்லூர்: இது மன்னார் குடியிலிருந்து வட கிழக்கே ஏழு மைல் தூரத்தில் இருக்கிறது. இங்கே மகமதியர்கள் அதிகம். இங்கு ஒரு மத்தியதரக் கலாசாலையு மிருக்கிறது.

iv பஞ்னூநாடு. இது மன்னார் குடிக்குத் தெற்கேயுள்ளது. இவ்வூ ரில்தான் பித்தளைப் பாத்திரங்கள் செய்யப்படுகின்றன.

v வடுவூர். இது இத்தாலூகாவி லுள்ள புகழ் பெற்ற விஷ்ணு ஸ்தல மாகும்.

திருத்துறைப்பூண்டித் தாலூகா

இது நமது ஜில்லாவின் தென் கிழக் குக்கோடியில் அமைந்திருப்பதைக் கவனிக்கவும். இத் தாலூகாவின் தலைநகரம் திருத்துறைப்பூண்டி. இவ் விடத்திலிருந்து இருப்புப் பாதை யின் கிளை தென்கிழக்காகக் கோடிக் கரை வரையில் செல்லுகிறது. இத் தாலூகாவில் முக்கியமாகக் கோரை யாறும், அதன் கிளை நதியான முள்ளி யாறும், அரிச்சந்திர நதியும் பாய் கின்றன. சமுத்திரக்கரை யோரத்தி லுள்ள வேதாரணியம் முதலிய இடங்களில், உப்பளங்கள் அதிகம். இத் தாலூகாவில் பெரும்பாலும் நெல் சாகுபடிதான் நடக்கிறது. வேதாரணியத்தில் புகையிலை சாகு படி செய்யப்பட்டு வெளியூர்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. திருத் துறைப்பூண்டிப் பட்டணத்தில் ஒரு ஹைஸ்கூலும், நீதிஸ்தலமும் (முனி சிப்கோர்டு) இருக்கின்றன.

இத்தாலூகாவின் முக்கியமான ஊர்கள்

i வேதாரணியம். இதன் ஜனத் தொகை 15036 ஆகும். இது ஒரு முக்கியமான க்ஷேத்திரம். பருவகா லங்களில் சமுத்திர ஸ்நானம் செய்ய இவ்வூருக்கும், இதற்குத் தெற்கே யுள்ளகோடிக்கரைக்கும் ஏராளமான ஜனங்கள் வருகிறார்கள்.

ii கோடிக்கரை. இது திருத்து றைப்பூண்டித் தாலூகாவின் தென் கிழக்கிலுள்ள முனை. இங்கிருந்து படகுகளின் வழியாகத் தெற்கே யுள்ள இலங்கைத் தீவுக்கு வியாபா ரப் போக்கு வரத்து நடக்கிறது. இங்கிருந்து இலங்கை சுமார் நாற் பதுமைல் தூரத்தில் இருக்கிறது. இக்கடற்கரையில் தீபஸ்தம்ப மொன்று உள்ளது. இதற்கு ஆதி சேது என்று பெயர்.

iii முத்துப்பேட்டை. இதில் மக மதியர்கள் அதிகமாக வசிக்கிறார் கள். இது ஒரு சிறு துறைமுகம். இதிலிருந்து தேங்காய்களும், தென் னங்கீற்றுக்களும் ஏராளமாய்ப் பல வூர்களுக்கு ஏற்றுமதி செய்யப்படு கின்றன.

தோப்புத்துறை, தில்லை விளாகம், முதலிய மற்ற ஊர்களும், இத்தாலூ காவில் இருக்கின்றன.

பட்டுக் கோட்டைத் தாலூகா

இது நமது ஜில்லாவின் மேட்டுப் பாங்கான இடம். புதிதாக வெட்டப் பட்ட கல்லணைக் கால்வாய் வழியாய் இத்தாலூகாவுக்குச் சமீப காலத்தில் ஜல வசதி செய்யப்பட்டிருக்கிறது. இதில் பாப்பாநாடு, மதுக்கூர், கந் தர்வக்கோட்டை முதலிய ஜமீன்கள்

இருக்கின்றன. இதில் பெரும்பாலும் வேர்க்கடலை, கம்பு, கேழ்வரகு முதலிய புன்செய்த்தானியங்களும், சமுத்திரக்கரையோரத்தில் உப்புச் சாகுபடியும், மா, பலா, முதலிய பழந்தரு விருட்சங்களும் பயிர் செய்யப்படுகின்றன. இப்பொழுது நெல், கரும்பு முதலியனவும் சாகுபடி செய்யப்படுகின்றன.

இத்தாலூகாவின் தலை நகரம் பட்டுக்கோட்டை. இதில் ஒரு ஹைஸ்கூலும், டிப்டி கலெக்டர் ஆபீஸும், நியாயஸ்தலமும் இருக்கின்றன. இங்கு ஒரு பழைய கோட்டையுமிருக்கிறது. பலா, மா, முதலான கனிகள் இங்கிருந்து பலவூர்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதன் ஜனத்தொகை 10981 ஆகும்.

இத்தாலூகாவின் முக்கிய ஊர்கள்:—

i. அதி வீரராமன் பட்டணம். இதில் சற்றேறக் குறையப்பட்டுக்கோட்டைப் பட்டணத்திலுள்ள ஜனசங்கியை இருக்கிறது. இதுபட்டுக்கோட்டைக்குத் தென் கிழக்கே எட்டு மைல் தூரத்தில் சமுத்திரக்கரையில் அமைக்கப் பெற்றது. இது ஒரு துறைமுகம். பாண்டிய மன்னருள் ஒருவரான அதிவீரராமன் என்பவரால் இது கட்டப்பட்டது. இங்கிருந்து உப்பு, தேங்காய் முதலியவைகள் மற்ற இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

ii. சாளுவ நாயகன் பட்டணம். தஞ்சாவூரில் அரசு புரிந்துவந்த மகாராஷ்டிர மன்னரான சரபோஜி ராஜா என்பவரால் ஆங்கிலேயர் இந்தியாவில் பிரஞ்சுக் காரர்களுடன் போர் புரிந்து அவர்களைத் தோற்கடித்ததன் ஞாபகார்த்தமாக இங்கே ஒரு கோபுரம் கட்டப்பட்டிருக்கிறது.



மனோரா

இதற்கு மனோரா என்று பெயர். இதில் பதினொரு தளங்கள் இருக்கின்றன. இப்பொழுது இது பழுதடைந்திருக்கிறது. ஆகையால் இதற்குச் சரபோஜி ராஜன் பட்டணம் என்று மற்றொரு பெயருமுண்டு.

இத்தாலூகாவில் உரத்தநாடு என்னுமிடத்தில், தஞ்சை ராஜாவின் சத்திரமும், ஒரு ஹைஸ்கூலும் இருக்கின்றன.

அறந்தாங்கித் தாலூகா.

இது ஒரு காடாரம்பம், காட்டாறுகளைத் தவிர வேறு ஆறுகள் இங்கில்லை. கம்பு, கேழ்வரகு, முதலான புன்செய்ப் பயிர்கள் இங்குச் சாகுபடி செய்யப்படுகின்றன.

இத்தாலூகாவின் தலைநகரம் அறந்தாங்கி. இதில் நெசவுத் தொழில் கொஞ்சம் நடக்கிறது. இதற்குச் சமீபத்தில் சரளைக்கல் தோண்டியெடுக்கப்பட்டு மற்ற ஊர்களுக்கு அனுப்பப் படுகிறது.

இத்தாலூகாவின் முக்கியமானஊர்கள்:—

1. ஆவுடையார்கோவில்: இதைப் பற்றி ஏற்கனவே குறிப்பிட் டிருக் கிறோம். இது அறந்தாங்கிக்குத்



ஆவுடையார் கோவில்

தெற்கே சுமார் எட்டுமைலுக் கப்பா லுள்ள சிவஸ்தலமாகும். இங்குள்ள கோவில் சிறந்த சிற்ப வேலைப்பாட் டுடன் கட்டப்பட்டுள்ளது.

இத்தாலூகாவைச் சேர்ந்த மற்ற ஊர்களான மீன்மிசல், மணமேற் குடி என்பவைகள் பண்டைக்காலத் தில் பெயர்பெற்றிருந்தன. இவை களில் ஏற்பட்டுள்ள சத்திரங்களில் இராமேஸ்வரம்செல்லும் பிரயாணி கள் தங்குவது வழக்கம்.

பயிற்சி

1. நமது ஜில்லாவிலுள்ள தாலூகாக்கள் எவ்வளவு? என்னென்ன?
2. இவைகளில் எவை சமுத்திரக்கரை யோரத்தில் இருக்கின்றன?
3. எந்தத் தாலூகாக்களில் உப்பளங்கள் உண்டு?
4. எந்தத் தாலூகாக்கள் மேட்டுப்பாங் கான பிரதேசம்?
5. 1911 ம் வருஷத்துக்கு முன் என் னென்ன தாலூகாக்கள் இருந்தன?
6. பிறகு எவை புதிதாகச் சேர்க்கப்பட் டவை?
7. கொள்ளிடக் கரையோரத்தி லுள்ள தாலூகாக்கள் எவை?
8. கல்லணைக் கால்வாய் எந்தெந்தத் தாலூ காக்கள் வழியாய் ஓடுகிறது?
9. இந்த ஜில்லாவின் ரெவினியூ டிவிஷன் கள் எவ்வளவு? என்னென்ன?
10. திருவாரூரில் அரசுபுரிந்த சோழ மன் னர் யார்?
11. அவருக்கு அப்பெயர்வரக் காரணம் என்ன?

உலக விஷயங்கள்



சிறுவர்களே! நாம் வசிக்கும் ஜில்லாவானது பூகோளத்தின் ஒரு சிறு பகுதி என்பதை அறிந்து கொள்ளுங்கள். பூமியானது ஒரு உருண்டை வடிவமாக இருக்கிறது. அதனுடைய மத்தியபாகத்தின் சுற்றளவு சுமார் 25,000 மைல் ஆகும். இப்பெரிய உருண்டையின் பெரும்பாலான பாகங்கள் தண்ணீர் நிறைந்த சமுத்திரத்தால் சூழப்பட்டிருக்கின்றன. மற்ற இடங்கள் ஜனங்கள் வசிப்பதற்குரிய பூ பாகமாக இருக்கின்றன. பூமியை இரண்டு பாகங்களாகப் பிரித்திருக்கிறார்கள். கிழக்குப் பாகத்தில் மேற்குப் பாகத்தைவிடப் பூபாகம் அதிகமாயிருக்கிறது.

பூமியின் பெரிய பாகங்கள் கண்டங்களென்று சொல்லப்படுகின்றன. அக் கண்டங்களாவன.

(1) ஆசியா (2) ஐரோப்பா (3) ஆப்பிரிக்கா (4) ஆஸ்திரேலியா (5) அமெரிக்கா என்பனவாம்.

இவற்றுள் முதல் நான்கு கண்டங்கள் கிழக்குப் பாகத்திலும், ஐந்தாவதான அமெரிக்கா என்னும் பெரிய கண்டம் மேற்குப் பாகத்திலும் அமைந் துள்ளன. அமெரிக்கா பெரிய பூபாகமாயிருப்பதால் அது வட அமெரிக்கா என்றும், தென் அமெரிக்கா என்றும் பிரிக்கப்பட்டிருக்கிறது.

பூமியைச் சுற்றியுள்ள சமுத்திரங்கள் ஐந்து:—அவைகள் முறையே பசிபிக் மகா சமுத்திரம், அட்லாண்டிக் மகா சமுத்திரம், இந்து மகா சமுத்திரம், உத்தர மகா சமுத்திரம், தக்ஷணமகா சமுத்திரம் என்று சொல்லப்படும். ஒவ்வொரு கண்டத்திலும் தேசமென்று வழங்கும் சிறு பூபாகங்கள் அநேகம் உள. நாம் வசிக்கும் இடமானது பூமியின் கீழ்ப்பாதியில் உள்ள ஆசியாக் கண்டத்தில் இந்தியா என்னும் தேசமாகும்.

நமது தேசத்திற்குத் தெற்கே யுள்ளது இந்து மகா சமுத்திரம் எனப்படும்.

சிறுவர்களே! நாம் ஆகாய விமான மொன்றில் ஏறிக்கொண்டு



ஆகாய விமானம்

பூமியைச் சுற்றி வருவோமானல், அநேக ஆயிரம் அடிகள் உயரே சென்றவுடன், நம் கண்களினுல் பல விதமான காட்சிகளைக் காணலாம். முதன் முதலாகப் பூமியின் மட்டமானது மிகவும் மேடுபள்ளமாயிருப்பது தெரியும். தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து வடக்குமுகமாகச் சென்றால், நமது தேசத்தின் வடக்கு எல்லை



இமயமலைச் சிகரம்

யான இமயமலைக்கு வருவோம். வழியில் அநேக ஆறுகளும், பட்டணங்களும், காடுகளும், மலைகளும் காணப்படுகின்றன. வடக்கே செல்லச் செல்ல உஷ்ணம் குறைவாகவும், குளிர்ச்சி அதிகமாகவும் இருப்பதை உணரலாம். அங்கிருந்து இன்னும் வடக்கே சென்றால் மத்திய ஆசியாவில் பலமலைகளும், பல ஆறுகளும், பல பீட பூமிகளும் காணப்படும்.



புல்வெளிமைதானம்

இன்னும் வடக்கே சென்றால் புல் நிறைந்த மிகவும் விசாலமான மைதானங்கள் கண்களுக்குப் புலப்படுகின்றன. அவ்விடத்தில் பெரும்பாலும் ஜனங்கள் ஆடு மாடுகளை மந்தை மந்தையாய் வளர்த்து ஜீவனம் செய்கிறார்கள்.

மேலும் சிறிது வடக்கேசென்றால் பூமியானது அதி சீதளமாகவும், பனியினுல் மூடப்பட்டும் காணப் படு

எஸ்கிமோ வீடு

கிறது. இவ்விடத்தில் எஸ்கிமோ என்னும்ஜாதியார் பனிக்கட்டிகளால் வீடு கட்டிக்கொண்டு, பிராணிகளின் தோலை உடையாக அணிந்துகொண்டிருப்பதைக் காணலாம்.

இவைகளை யெல்லாம் பார்த்து விட்டு, இன்னும் சிறிது வடக்கே சென்றால் வட துருவத்துக்கு வரலாம். வடதுருவமானது எப்பொழுதும் பனிக் கட்டிகளினால் மூடப்பட்டிருக்கிறது. இங்கு வருஷத்தில் ஆறு மாதம் வெளிச்ச மாகவும், ஆறு மாதம் இருட்டாகவும் இருக்கிறது. இருட்டுக்காலங்களில் அங்கிருக்கும் ஜனங்கள் தெற்கே சென்று விடுகிறார்கள்.

இதனைக்கடந்து அப்புறம் சென்றால் மறுபடியும் ஆசியாவின் பின்புறத்திலுள்ள வடக்கு மகா சமுத்திரத்திற்கு வரலாம். அங்கிருந்து புறப்பட்டுத் தெற்கு முகமாகத் திரும்பினால் மறுபடியும் ஆச்சரியத்தை அனுபவிக்கலாம். திரும்பவும் நேராகச்சென்றால் வட அமெரிக்காவுக்கு வந்து சேருகிறோம். வட ஆசியாவைப்போல இவ்விடத்திலும் பனிக்கட்டிகள் திரள் திரளாகப் பூமியின்மேல் படிந்திருக்கின்றன. இங்கிருந்து தெற்கே சென்றால் கானடா என்னும் தேசத்திலுள்ள அநேக ஆறுகளையும், ஏரிகளையும் காணலாம்.

இன்னும் அதற்குத் தெற்கேசென்றால் ஐக்கியமாகாணங்களுக்கு வந்து சேருகிறோம். இவ்விடத்தில் பெரிய ஆறுகளும், மலைகளும், காடுகளும் இருக்கின்றன. இவ்விடத்தில் குடியிருப்பவர்கள் ஐரோப்பியர்கள். சில விடங்களில் அமெரிக்காவின் ஆதிக் குடிகளான செவ்விந்தியர்களைக்காணலாம். ஐக்கியமாகாணங்களின் பல விடங்களில் ஆப்பிரிக்காவிலிருந்து பல நூற்றண்டுகளுக்குமுன் கொண்டு வரப்பட்ட நீகிரோஜாதியினர்வசித்து வருவதைப் பார்க்கலாம்.

திரும்பவும் தெற்குநோக்கிப் பிரயாணம் செய்தால் பூமியானது வர வரக்குறுகி இரண்டு பக்கங்களிலும் சமுத்திரங்களால் உட்செல்லப்பட்டு, அமெரிக்காக் கண்டமானது இரண்டாகப்பிரிக்கப்படுவது நன்கு விளங்கும். தெற்கே மெக்ஸிகோ என்னும் தேசம் காணப்படுகிறது.

இன்னும் தெற்கு நோக்கிச் சென்றால் தென்னமெரிக்கா வந்து சேரலாம். அவ்விடத்தில் அடர்ந்த பல பெரிய காடுகள் இருக்கின்றன. உலகத்தில் மிகவும் பெரிதான அமேஜான் என்னும் நதி ஓடுகிறது. கடைசியாகக் கேப் ஹார்ன் என்னும் தென் அமெரிக்காவின் தெற்குக் கோடிமுனைக்கு வருகிறோம்.

இங்கிருந்து அட்லாண்டிக் மகா சமுத்திரத்தின் வழியாக மத்திய ஆப்பிரிக்காவுக்குச் செல்லுவோம். நடு வழியில் நூற்றுக்கணக்கான தீவுகளைக் காணலாம். மத்திய ஆப்பிரிக்காவில் மலைகள், பீடபூமிகள், ஆறுகள், ஏரிகள், ஏராளமாய் இருக்கின்றன. அவ் விடத்திலுள்ள காட்டு மிருகங்களைக் கவனியுங்கள். (1) காண்டா மிருகம் (2) யானை (3) சிங்கம் முதலியவைகள் மிகுதியாய் இருப்பதைக் காணலாம். இந் நாட்டு ஜனங்கள் கரியநிறமுள்ள நீகிரோவர்கள். இப்பிரதேசத்திலும் அநேக இடங்களில் ஐரோப்பியர்கள் குடியேறியிருப்பதைப் பார்க்கலாம்.

இதற்குச் சிறிது வடக்கே சென்றால், உலகத்திலுள்ள பெரிய நதிகளில் ஒன்றான நைல் நதியைக் காணலாம். இதற்கு மேற்காக ஸாஹரா என்னும் பெரும்பாலைவனம் தோன்றுகிறது. இங்கிருந்து கிழக்கு முக

மாகப் பிரயாணம் செய்தால் இந்து மகாசமுத்திரத்தையும், அதன் மத்தியிலுள்ள பல தீவுகளையும் கடந்து ஆஸ்திரேலியா என்னும் கண்டத்



ஆஸ்திரேலியா தங்கச் சுரங்கம்

துக்கு வரலாம். இதன் மேற்குப் பாகங்களில் அனேக தங்கச் சுரங்கங்கள் இருக்கின்றன. இதில் ஆங்கிலேயர்கள் குடியேறி வசிக்கின்றனர். இங்குச் சில விசித்திரமான மரங்களும், பிராணிகளும் இருப்பதைப் பாருங்கள். ஆஸ்திரேலியாவின் வட பாகத்திலும் ஒரு பெரிய பாலைவனம் இருக்கிறது.

இதுவரையில் நாம் செய்துவந்த சுற்றுப் பிரயாணத்தில் மிகவும் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய கண்டம் ஒன்றை இன்னும் பார்க்கவில்லை. அதுதான் ஐரோப்பாக் கண்டமாகும். மறுபடியும் ஆகாயவிமானத்திற் கிளம்பி அரபிக்கடலைக் கடந்து, ஆப்பிரிக்காவுக்கும்ஐரோப்பாவுக்கும் மத்தியிலுள்ள மத்தியதரைக்கடலுக்குவந்து சேருவோம். இங்கிருந்து கவனித்தால் ஐரோப்பாக் கண்டத்தைக் காணலாம். இதில் மிக்க நாகரிகம்பெற்ற பல தேசங்களிருக்கின்றன. இதன் மத்தியில் ஆல்ப்ஸ் என்னும் உயர்ந்த மலை இருப்பதைப் பாருங்கள். அதனுடைய சிகரங்கள் எப்பொழுதும் பனியினால் மூடப்பட்டிருக்கின்றன. ஐரோப்பாக் கண்டத்தில், பாரிஸ், லண்டன், ம்யூனிக், ரோம், பர்லின், பிட்டோகிராட் முதலிய உலகப் பிரசித்திபெற்ற பெரியநகரங்களைக்காணலாம். இக்கண்டத்தில் பல இடங்களில் பெரிய கைத்தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான பல உலகக் காட்சிகளைப் பார்த்துவிட்டு மறுபடியும் நமது தேசத்திற்குத் திரும்புவோம்.

Printed at the Easen Printing Works, Madura

குழந்தைகளே!

நமது ஜில்லாவின் சரித்திர சம்பந்தமான சில விஷயங்கள் ஆங்காங்கு சில நகரங்களைப்பற்றி எழுதும் பொழுது சொல்லப்பட்டதை நீங்கள் தெரிந்துகொண் டிருக்கிறீர்கள். அதை மறுபடியும் சுருக்கமாக இங்கே குறிப்பிடுவோம்.

ஆதிகாலத்தில் தென்னிந்தியாவில் பண்டைகாலக் குடிகளான **நாகர்கள்** இங்கே வெகு காலம் வசித்து வந்ததாகத் தெரிகிறது. அவர்கள் சர்ப்பங்களை ஆராதித்து வந்ததால் அவர்களுக்கு அப்பெயர் ஏற்பட்டது. அவர்கள் நாகரிகத்தில் மிகவும் தாழ்ந்தவர்கள். அவர்களைத் **திராவிடர்கள்** என்னும் ஜாதியார் சண்டையில் தோற்கடித்து இந்நாட்டைக் கைப்பற்றிக் கொண்டனர். திராவிடர்கள் நாகரிகத்தில் சிறந்தவர். அவர்கள் காலத்தில் வெகு கிராமங்களும் நாகரிகமலிந்த பல பட்டணங்களும் ஏற்படுத்தப் பட்டன. கைத் தொழில், பயிர்த் தொழில், வியாபாரம், படிப்பு முதலியவைகள் அவர்கள் காலத்தில் மிகவும் உயர்வை அடைந்தன. படிப்பு, நாகரிகம், சண்டை செய்யும் முறை இவைகளில் மிகவும் கீழ்ப்பட்டவர்களான புராதனக் குடிகள் திராவிடர்களால் விரட்டப்பட்டுக் காடுகளிலும், மலைகளிலும் ஓடி ஒளிந்து கொண்டார்கள். திராவிடர்கள் குடியேறின பிறகு பல நூற்றாண்டுகள் கழித்து வட நாட்டிலிருந்து தென்தேசத்திற்கு ஆரியர்கள் வரத் தொடங்கினர். காலக்கிரமத்தில் இவ்விரு நாகரிகமும் கலந்து தற்கால நாகரிகம் ஏற்பட்டது. இதனால் திராவிடர்களின் ஆதிகாலக் கலைகளும், பாஷையும், நடை, உடை பாவனைகளும் மாறுபட்டன.

திராவிடர்கள், சேர, சோழ, பாண்டியர்கள் என மூன்று வகுப்பினர்களாகப் பிரிந்து தென்னிந்தியாவில் வசித்து வந்தார்கள். அவர்களுள் சோழமன்னர்கள் திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் உறையூர் என்னுமிடத்தைத் தலைநகராக வைத்துக்கொண்டு வெகு காலம் அரசு புரிந்து வந்தார்கள். பிறகு தஞ்சாவூரைப் பிரதான நகரமாக ஏற்படுத்திக் கொண்டார்கள். சோழ தேசத்திற்குத் தெற்கே பாண்டிய நாடும், தென் மேற்கே சேரநாடும் அமைந்துள்ளன. பாண்டிய நாட்டின் தலை நகரம் மதுரை. இம் மூன்று தேசங்களுக்கும் பல தடவைகளில் யுத்த மேற்படுவதுண்டு. சில சமயங்களில் சோழ மன்னரும் மற்ற காலங்களில் இதர மன்னர்களும் ஜெயம்பெற்று மற்ற இரண்டு நாடுகளையும் ஆக்கிரமித்து வந்தார்கள். சோழநாட்டு மன்னர்களுள் சிலர் மிகவும் கீர்த்தி வாய்ந்தவர்களாயும் வடக்கே கங்கை நதிக் கரை முதல் தெற்கே கன்னியாகுமரி வரையில் ராஜ்ஜியத்தைப் பெருக்கி ஆண்டு வந்திருக்கிறார்கள்.

மிகவும் சிறப்புற்றோங்கிய புத்த மன்னரான அசோகரின் கல்வெட்டுக்களின் மூலமாக, தென்னிந்தியாவில் வெகுகாலமாகச்சோழராஜ்ஜியம்சிறப்புற்றிருந்ததாய் நாம் அறிகிறோம். திருவாரூரில் **மனுநீதிச் சோழன்** என்னும் பெயர் வாய்ந்த சோழமன்னன் ஆண்டு வந்தான் என்னும்

கதையை நாம் முன்னமேயே குறிப்பிட்டிருக்கிறோம். கி பி. முதல் நூற்றாண்டில் **கரிகால் சோழன்** என்பவன் மிகப் பேரும் சிறப்பும் பெற்று அரசாண்டுவந்தான். அவன் **வெண்ணில்** என்ற இடத்தில் சேர பாண்டியர்களைத் தோற்கடித்தான். மாயவரம் தாலூகாவிலுள்ள காவிரிப்பூம் பட்டினத்தை ஸ்தாபித்தான். இது காவிரியின் முகத்துவாரத்தி லுள்ளது. இவனுடைய ராஜ்ஜியம் வடக்கே அவந்தி வரையில் பரவிற்று. காவிரியாற்றின் நீர்ப்பாசன வசதிகளைச் சீர்ப்படுத்திப் பயிர்த்தொழிலை விருத்திசெய்தான். அவன் மகன் **நலன் கிள்ளி** என்பவன் சேரபாண்டியர்களை வென்று அவர்களுடைய கோட்டைகளைக் கைப்பற்றினான். கரிகால் சோழன் வம்சத்தவர்களான **கிள்ளிவளவன், பெருநற்கிள்ளி** என்பவர்கள் கி. பி. 150 வருஷம்வரை ஆண்டுவந்தார்கள். பிறகு பல நூற்றுண்டுகள் வரையில் சோழமன்னர்களின் சரித்திரம் நமக்குத் தெரியவில்லை. பிறகு ஏழாவது நூற்றுண்டில் காஞ்சிபுரத்தில் ஆண்டு வந்த பல்லவ அரசர்களால் சோழநாடு கைப்பற்றப்பட்டது.

அப்புறம் ஒன்பதாம் நூற்றுண்டின் முடிவில் **விஜயபாலன்** என்பவன் சோழமன்னன் ஆனான். இவன் மேற்கே கொங்கு நாட்டையும் வடக்கே பல்லவநாட்டையும் ஜெயித்தான். இவனுக்குப்பிறகு **பராந்தகன்** என்னும் அரசன் ஆண்டுவந்தான். இவன் நாடு வடக்கே காளஹஸ்தி முதல் தெற்கே கன்னியாகுமாரிவரையிலும் வியாபித்திருந்தது.

பத்தாவது நூற்றுண்டில் அரசுபுரிந்த **ராஜராஜசோழனின்** வெற்றிகளையும், அவருடைய செயல்களையும்பற்றி ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறோம். இவருக்கு மும்முடிச் சோழனென்றும் பெயர். தஞ்சாவூர் பெரிய கோவிலைக் கட்டினவர் இவர் தான். இவரது ராஜ்ஜியம் வடக்கே **உரியா** தேசம் முதல் தெற்கே கன்னியாகுமரிவரையில் பரவி இருந்தது. காவேரி நதியின் தண்ணீரை முற்றும் உபயோகப்படுத்தும்படி பல வசதிகளைச் செய்தார். இவர் மகனாகிய **ராஜேந்திர சோழன்** கி. பி. 1011 முதல் 1044 வரையில் அரசுபுரிந்தான். இவன் பர்மாவையும் நிக்கோபார்தீவையும் ஜெயித்துத் தன் வசமாக்கினான்.

முதலாவது குலோத்துங்க சோழன் கி. பி. 1070 முதல் 1118 வரை ஆண்டுவந்தான். இவன் வடக்கே கலிங்கதேசத்தைக் கைப்பற்றினான். இக்கதை **கலிங்கத்துப்பரணி** என்னும் தமிழ்நூலில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

இவனுக்குத் **திரிபுவன சக்கரவர்த்தி** என்று வேறு பெயர் உண்டு. இவனுக்குப்பிறகு அநேக சோழ மன்னர்கள் புகழுடன் ஆண்டு வந்தார்கள்.

14 வது நூற்றுண்டில் முதன் முதலாக மகம்மதியர் படை யெடுப்புச் சோழநாட்டிற்குஏற்பட்டது. அதைச் செய்தவர் **மாலிக் காபர்** என்பவர். பிறகு தஞ்சாவூர் ராஜ்ஜியமானது விஜயநகர அரசர்களின் சேனைத் தலைவர்களான நாயக்கர்களால் கைப்பற்றப்பட்டது. அப்புறம் 1674 ம் வருஷத்தில் மகாராஷ்டிர மன்னரான சிவாஜியின் சகோதரர் **வெங்காஜி** தஞ்சை நாட்டை ஜெயித்து அதைத் தன்வசமாக்கிக் கொண்டார்.

நாளடைவில் மகாராஷ்டிரர் பலம் குறையவே அவர்கள் கர்நாடக தேசத்தை ஆண்டுவந்த மகம்மதியர் களுக்குக் கீழ்ப்பட்டு அரசுபுரிந்து வந்தனர். 1773 ம் வருஷத்தில் கர்நாடக நவாப்பாகிய மகம்மதலிக்கு விரோதமாக மைசூர் சுல்தானுடன் அவர்கள் சேர்ந்திருப்பதைக் கேட்ட ஆங்கிலேயர் தஞ்சாவூரைத் தன்வசமாக்கி மகாராஷ்டிர மன்னரான சரபோஜி ராஜாவுடன் 1799ம் வருஷத்தில் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார்கள். அதன் பிரகாரம் தஞ்சை நகரும் அதன் கோட்டைகளும் தவிர மற்ற பாகங்கள் ஆங்கிலேயர் ஆளுகைக்குக் கொண்டு வரப்பட்டது.

சரபோஜிராஜா 1832ம் வருஷத்தில் இறந்தார். அவர் புதல்வர் சிவாஜி மன்னர் அப் பட்டத்திற்கு வந்து சிறிதுகாலம் ஆண்டுவிட்டு வேறு வார்சு அன்னியில் 1855 ம் வருஷத்தில் உயிர் துறந்தார். பிறகு தஞ்சாவூர்ப்பட்டணமும், கோட்டையும், மற்றுமுள்ள எல்லாப் பிரதேசங்களும் ஆங்கிலேயர் கைவச மாயின.

1799 ம் வருஷத்தில் தஞ்சை ராஜ்ஜியத்தின் பெரும்பாலான பிரதேசம் ஆங்கிலேயர் வசமானதும் அதை ஆள்வதற்கு ஒரு கலெக்டர் நியமிக்கப்பட்டார். ஆதியில் நாகப்பட்டணமும் பிறகு தரங்கம்பாடியும் கடைசியாகத் தஞ்சாவூரும் கலெக்டரின் காரியஸ்தானமாயின.

மகாராஷ்டிர அரசர்களால் சங்கீதம், சித்திரவேலை முதலிய பல கலைகள் போற்றப்பட்டு அவைகள் தமிழ் நாட்டில் மிகவும் செழிப்படைந்தன.

முற்றிற்று

வந்தேமாதரம்!